28.09.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 1.54 அடி உயர்வு



காவிரி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 1.54 அடி உயர்ந்தது. காவிரி நடுவர் மன்ற உத்தரவுப்படி, கர்நாடகம் தமிழகத்துக்கு கடந்த நான்கு நாள்களாக காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்துவிட்டுள்ளது. இந்த நிலையில், காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளிலும், அதன் துணை நதிகளான பாலாறு, சின்னாறு, தொப்பையாறு பகுதிகளிலும் கடந்த மூன்று நாள்களாக மழை பெய்து வருவதாலும் காவிரி ஆற்றில் திடீர் வெள்ளம் ஏற்பட்டு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், மேட்டூர் அணைக்கு சனிக்கிழமை காலை 15,060 கன அடியாக இருந்த நீர்வரத்து, ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 27,442 கன அடியாக அதிகரித்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 12,500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு

31.12 டி.எம்.சி.யாக உள்ளது. சனிக்கிழமை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 66.66 அடியாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி நீர்மட்டம் 68.20 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 1.54 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், சம்பா, தாளடிப் பயிர்களுக்கு தடையின்றி தண்ணீர் கிடைக்கும் என்று காவிரி டெல்டா பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**இயற்கை உரங்களின் பயன்பாடு: விவசாயிகளுக்கு விழிப்புணர்வு**

இயற்கை உரங்களின் பயன்பாடுகள், நன்மைகள் குறித்த குறுந்தகடு விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் திரையிடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராவக ராவ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில், இயற்கை உரங்களின் பயன்பாடுகள், அதனால் ஏற்படும் நன்மைகள், மண்வளம் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்த குறுந்தகடு திரையிடப்பட்டு விவசாயிகளுக்கு விளக்கிக் கூறப்பட்டது. தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் பேசியபோது, மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் 75 சதவீதத்துக்கும் மேல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மேலும், திருந்திய நெல் சாகுபடியில் அனைத்துத் தொழில்நுட்பங்களையும் முறையாகக் கடைப்பிடித்து விவசாயிகள் அதிக லாபம் அடைய வேண்டும்.

ஊத்துக்கோட்டை, திருவொற்றியூர் ஆகிய வட்டங்களில் இணையம் மூலம் பட்டா வழங்கப்படும். மற்ற வட்டங்களில் விரைவில் இந்த வசதி செய்து தரப்படும். மாவட்டத்தில் முதற்கட்டமாக நந்திமங்கலம், இலுப்பூர், பாலவேடு, தேவம்பட்டு ஆகிய 4 கிராமங்களில் கால்நடை பட்டி (பவுண்டு) அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

வேளாண்மைத் துறையினரால் தயாரிக்கப்பட்டுள்ள சிறுதானியங்கள் மூலம் பாரம்பரிய உணவுகள் தயாரிக்கும் முறை பற்றிய துண்டுப்

பிரசுரத்தை மாவட்ட ஆட்சியர் வெளியிட, அதை அனைத்து விவசாயிகளும் பெற்றுக் கொண்டனர்.

பின்னர், கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில், திருவள்ளூர் துணை ஆட்சியர் ராகுல்நாத், மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, வேளாண் இணை இயக்குநர் முருகவேல் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**இலவச ஆடு, மாடுகள் வழங்கும் விழா**

புழல் ஒன்றியத்துக்கு உள்பட்ட புள்ளிலைன், விளாங்காடுபாக்கம் ஆகிய ஊராட்சிகளில் அரசின் விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது. பள்ளிலைன் ஊராட்சியில் 50 பேருக்கு கறவை மாடுகளும், விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் 85 பேருக்கு ஆடுகளும் வழங்கப்பட்டன. புள்ளிலைன் ஊராட்சித் தலைவர் ஆர். சுப்பிரமணி, புழல் ஒன்றியக் குழுத் தலைவர் குமாரி அருணாச்சலம் ஆகியோர் தலைமை வகித்தனர். விழாவில், எம்.பி. பி. வேணுகோபால், திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் சிறுணியம் பி.பலராமன், மாதவரம் சட்டப் பேரவை தொகுதி உறுப்பினர் வி. மூர்த்தி, கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் லதா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும் ஆடுகள் பராமரிப்புச் செலவாக தலா ரூ. 2 ஆயிரத்துக்கான காசோலை 85 பேருக்கு வழங்கப்பட்டது.

புள்ளிலைன் ஊராட்சித் துணைத் தலைவர் ஆர். கோவிந்தன், புள்ளிலைன் ஊராட்சியின் செயலாளர் இரா.சங்கரன், வார்டு உறுப்பினர்கள் எஸ். ஆழ்வார், என்.சுகுமார், பத்மாவதி தமிழரசன், சுந்தர், மஞ்சுளா நாகரத்தினம், விளாங்காடுபாக்கம் கண்ணன் அருணாச்சலம், அரசு மருத்துவர் பரிமளா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**இயற்கை உணவு கருத்தரங்கம்**

காஞ்சிபுரம் அகத்தியா கிருபா அறக்கட்டளை சார்பில், இயற்கை உணவின் மகத்துவதை விளக்கும் வகையிலான கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் இயற்கை உணவு வல்லுநர் எம்.ஆனையப்பன் கலந்து கொண்டு, இன்றைய உணவு பழக்க வழக்கம் குறித்தும், இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட காய்கறிகள் உள்ளிட்ட உணவு பொருள்களை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பேசினார். அறக்கட்டளை நிறுவனர் அன்புச் செழியன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**வரத்து அதிகரித்ததால் விலை குறைந்த வாழைக்காய்**

மேட்டுப்பாளையம் அருகே உள்ள வாழைக்காய் ஏல மையத்தில் வரத்து அதிகரித்ததால் அதன் விலை குறைந்தது. அன்னூர் சாலை காரமடை பிரிவில் உள்ள வாழைக்காய் ஏல மையத்தில் புதன், ஞாயிற்றுக்கிழமைகளில் விற்பனை நடைபெறுகிறது. இதில், தற்போது வாழைக்காய்களின் வரத்து அதிகரித்துள்ளதால் அதன் விலை குறைந்துள்ளது. இதுகுறித்து ஏல மைய நிர்வாகி வெள்ளிங்கிரி கூறியது:

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் நேந்திரம் 14,000 தார்கள், கதளி 1,500 தார்கள், ரோபஸ்டா 800 தார்கள், தேன் வாழை 200 தார்கள், செவ்வாழை 300 தார்கள், ரஸ்தாளி 400 தார்கள் என 18,000 தார்கள் வரை விற்பனைக்கு வந்தன. அதில் நேந்திரம் கிலோ ரூ.20, கதளி கிலோ ரூ.20, ரோபஸ்டா தார் ரூ.200, பூவன் ரூ.400, தேன் வாழை ரூ.400, செவ்வாழை ரூ.750, ரஸ்தாளி ரூ.400 வரை விற்பனையானது.

மேட்டுப்பளையம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை பெய்த மழையால் தேக்கம்பட்டி, மருதூர், நெல்லித்துறை, கண்டியூர், லிங்காபுரம், மொக்கைமேடு உட்பட ஆற்று பாசன பகுதிகளில் முற்றிய நிலையிலிருந்த 1-லட்சத்திற்கும் மேலான வாழைகள் அடியோடு சாய்ந்தன.

இதனால் விவசாயிகள் கீழே சாய்ந்த வாழைத்தார்களை வெட்டி எடுத்து விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதனால் வரத்து அதிகமாகி விலை குறைந்துள்ளது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் 6,000 தார்கள் வரை வரத்து அதிகரித்ததால், நேந்திரம் கிலோ ரூ.3 வரையும், கதளி கிலோ ரூ.5 வரையும், ரோபஸ்டா தார் ரூ.20 வரையும் விலை குறைவு ஏற்பட்டது என்றார்.

**வானிலை மாற்றத்தால் முட்டை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு**

வானிலை மாற்றத்தால் முட்டை உற்பத்தி உயர வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: அடுத்த 3 நாள்கள் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். தென்மேற்கு பருவமழை தமிழகத்தின் மீது தாக்கம் கொள்ளும் வாய்ப்பு உள்ளதால், பரவலாக மழை பெய்யும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. இதனால், மேகமூட்டம் அதிகரித்தும், வெப்ப அளவுகள் குறைந்தும் காணப்படும். இந்த வானிலையில் கோழிகள் இடையே தீவன எடுப்பு இயல்பாகவே காணப்படும். முட்டை உற்பத்தி உயர வாய்ப்பு உள்ளது.

கடந்த வாரம் கோழியின கண்காணிப்பு, கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் ஆய்வு செய்ததில் இறந்த கோழிகள் பெரும்பாலும், ஈகோலை கிருமி, சளி பாதிப்புக்குள்ளாகி இறந்துள்ளன. எனவே, பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம், தண்ணீரில் ஈகோலை கிருமியின் தாக்கம் உள்ளதா என ஆய்வகத்தில் பரிசோதனை செய்து, அதற்கு தகுந்தாற்போல கிருமிநாசினிகளை உபயோகிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"விவசாயப் பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்'**

திருச்சியில் சனிக்கிழமை நடைபெற்ற திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு ஆலோசனைக் கூட்டத்தில், மனுக்களை அளித்த பல்வேறு அமைப்புகள் விவசாயப் பிரச்னைக்கும், நதிநீர் இணைப்புக்கும் முக்கியத்துவம் தர வலியுறுத்தின.

முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு தலைமையிலான திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினரிடம் திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு அமைப்பினர், வர்த்தக, வியாபார சங்கத்தினர், விவசாய சங்கங்களைச் சேர்ந்தோர் தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர்.

புதுக்கோட்டை மாவட்ட திமுக செயலர் பெரியண்ணன் அரசு, முன்னாள் மத்திய அமைச்சர் எஸ். ரகுபதி மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தோர் கொள்ளிடம் ஆறுடன் அக்னியாறு, வெள்ளாறு ஆகியவற்றை இணைத்தால் வெள்ளநீர் வீணாகாமல் விவசாயத்துக்குப் பயன்படும்.

புதுக்கோட்டை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும், குடுமியான்மலை, வம்பன் வேளாண் பண்ணைகளை மேம்படுத்த வேண்டும் என்றனர்.

தேசிய - தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் பி. அய்யாக்கண்ணு:

திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை உள்ளிட்ட 7 மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் தொண்டைமான் கால்வாய் திட்டம் (காவிரி- வைகை- வைப்பாறு) நிறைவேற்ற வேண்டும். விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வதுடன், விளை பொருள்களுக்கு உரிய விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

தமிழ்நாடு சமூக நலவாரியத்தின் முன்னாள் தலைவி கவிஞர் சல்மா: மணப்பாறை பகுதியைச் சுற்றியுள்ள கிராமப்புற மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும்.

மண்ணச்சநல்லூர் ஒன்றிய திமுக செயலர் வி.எஸ்.பி. இளங்கோவன்: திருமணத்தை பதிவு செய்யும் புதுமண தம்பதிகளுக்கு 15 நாள்களுக்குள் குடும்ப அட்டை வழங்குவதுடன், குடும்ப அட்டையில் குடும்பத் தலைவர் படத்துடன், குடும்பத் தலைவி படத்தையும் இணைத்து வழங்க வேண்டும். இதுபோன்ற பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தங்களது கோரிக்கைகளை மனுக்களாக அளித்தனர்.

குழுவில் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, திமுக துணைப் பொதுச் செயலர்கள் சுப்புலட்சுமி ஜகதீசன், வி.பி. துரைசாமி, முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, பேராசிரியர் ராமசாமி, திமுக செய்தித் தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன், வழக்குரைஞர்கள் சண்முகசுந்தரம், இளங்கோ ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, வடக்கு மாவட்டச் செயலர் காடுவெட்டி ந. தியாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நிகழாண்டில் 5,107 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள்**

திருச்சி மாவட்டத்தில் 2015-16-ம் நிதியாண்டில் 5,107 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் டி.பி. பூனாட்சி.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர், ஸ்ரீரங்கம், மணப்பாறை, மண்ணச்சநல்லூர் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சனிக்கிழமை நடைபெற்ற, விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் விழாவில் அவர் மேலும் பேசியது:

இத்திட்டத்தின் கீழ், திருச்சி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 325 ஊராட்சிகளில் ரூ. 26.5 கோடியில், 20,776 பயனாளிகளுக்கு 83,604 விலையில்லா வெள்ளாடுகளும், ரூ. 5.53 கோடியில் 1,600 விலையில்லா பசுக்களும் வழங்கப்பட்டுள்ளன.

நிகழாண்டில் திருச்சி மாவட்டத்தில் ரூ. 6.74 கோடியில் 5,107 பயனாளிகளுக்கு 20,428 விலையில்லா வெள்ளாடுகளும், ரூ. 54 லட்சத்தில் 150 பயனாளிகளுக்கு விலையில்லா பசுக்களும் வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 22 கிராம ஊராட்சிகளில் 1.67 கோடியில் 1,288 பயனாளிகளுக்கு 5,152 வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

முன்னதாக, திருவெறும்பூர் சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட 4 ஊராட்சிகளைச் சேர்ந்த 147 பயனாளிகளுக்கும், ஸ்ரீரங்கம் சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட 6 ஊராட்சிகளைச் சேர்ந்த 272 பயனாளிகளுக்கும், மண்ணச்சநல்லூர் சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட 5 ஊராட்சிகளைச் சேர்ந்த 278 பயனாளிகளுக்கும், துறையூர் சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட 5 ஊராட்சிகளைச் சேர்ந்த 422 பயனாளிகளுக்கும் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட்டன.

ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமை வகித்தார். அரசு தலைமைக் கொறடா ஆர். மனோகரன், மாநிலங்களவை உறுப்பினர் டி. ரெத்தினவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் சந்திரசேகர் (மணப்பாறை), இந்திரா காந்தி (துறையூர்), சி. வளர்மதி (ஸ்ரீரங்கம்), மாவட்ட ஊராட்சித் தலைவர் டி. ராஜாத்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மகசூல் இழப்பினை தவிர்த்திட வறட்சி மேலாண்மை உத்திகள்**

அரியலூர் மாவட்டத்தில் நிகழாண்டில் மானாவாரியாக பயரிடப்பட்டுள்ள பருத்தி, மக்காசோளம் மற்றும் நிலக்கடலை பயிர்களில் மகசூல் இழப்பினை தவிர்த்திட கீழ்க்காணும் வறட்சி மேலாண்மை உத்திகளை கையாள வேண்டும் என அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பன்னீர்செல்வம் விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார். உத்தி 1: 2% டிஏபி மற்றும் 1% பொட்டாஷ் கரைசலை ஆரம்ப நிலையில் தெளித்தல், 3% கயோலின் (வெள்ளை களிமண்)கரைசலை பயிர்களின் அனைத்து நிலையிலும் தெளிக்கலாம்.

சைகோசில் என்ற வளர்ச்சி ஊக்கியினை 500 பி.பி.எம். என்ற அளவில் தெளித்தல், அசோஸ் பைரில்லம் , பாஸ்போ பாக்டீரியம் போன்ற உயிர் உரங்களை ஹெக்டேருக்கு தலா 10 பொட்டலம் வீதம் 25 கிலோ தொழு எருவுடன் கலந்து இட வேண்டும். உத்தி 2: மக்காசோளம் விதைக்கும் போது விதைகளை 1 சதம் பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் உரக் கரைசலில் 6 முதல் 8 மணிநேரம் வரை ஊற வைத்து விதைத்தல். பி.பி.எப்.எம் என்ற பாக்டீரியா 1சதம் கரைசலை இலையின் மீது நன்கு நனையும் படி தெளித்தல். உத்தி 3: 0.5 % ஜிங்க் சல்பேட், 0.3 % போரிக் அமிலம், 0.5 % இரும்பு சல்பேட், 1 % யூரியா கரைசலினை பயிர்களின் முக்கிய வளர்ச்சி கட்டங்களில் கைத்தெளிப்பான் கொண்டு மாலை 3 மணிக்குப் பின் தெளித்தல் வேண்டும். தற்போது பயிரிடப்பட்டுள்ள மக்காசோளம், பருத்தி மற்றும் நிலக்கடலை பயிர்களில் மகசூல் இழப்பினை தவிர்த்திடலாம் என அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டி :நொய்யல் பாசன விவசாயிகள் முடிவு

விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்க வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவது என நொய்யலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நொய்யல் பாசன விவசாயிகள் நலச்சங்கக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கரூர் மாவட்டம், க.பரமத்தி அருகே நொய்யலில் நடைபெற்ற சங்கக் கூட்டத்துக்கு தலைவர் நொய்யல் ராமசாமி தலைமை வகித்தார்.

குழு உறுப்பினர் குப்பம் முருகேசன் வரவேற்றார். இதில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சுப்ரமணி, லோகநாதன், சின்னசாமி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நொய்யல் ஆற்றில் சாயக்கழிவு கலப்பதால் ஏற்படும் தீமை குறித்து விவாதிக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் நொய்யல் ஆற்றில் திருப்பூர் சாயக்கழிவு நீர் கலக்காமல் தடுத்து நல்ல தண்ணீரை அணையில் தேக்கி பாசன வாய்க்கால் மற்றும் மதகுகளைச் சீரமைத்து பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும். உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி அமைக்கப்பட்ட, சுற்றுப்புறச் சூழல் இழப்பீட்டு ஆணையத்தை கலைக்கும் முயற்சியைக் கைவிட்டுவிட்டு இந்த ஆணைத்திற்கு தலைவரை நியமிக்குமாறு மத்திய அரசை கேட்டுக்கொள்வது,

தமிழக அரசு அரசாணை பிறப்பித்து ஏற்கெனவே சிலருக்கு குறைவாக கொடுக்கப்பட்ட நஷ்ட ஈடுத் தொகையை உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி உடனடியாக திரும்ப வசூல் செய்து தருமாறு அரசை கேட்டுக் கொள்வது.

விவசாயிகளின் பிரச்னையை தீர்க்கும் வகையிலும், விவசாயிகளின் ஒற்றுமையை நிரூபிக்கும் வகையிலும் வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விவசாயிகள் சார்பில் போட்டியிடுவது, இந்த தீர்மானங்களை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும் அனுப்புவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. உங்காம்பாளையம் ராமசாமி நன்றி கூறினார்.

## 2,600 டன்கள் யூரியா தஞ்சாவூருக்கு வந்தது

டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்காக 2,600 டன்கள் யூரியா உரம் தஞ்சாவூருக்கு சனிக்கிழமை வந்தது. தஞ்சாவூர், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் சம்பா சாகுபடி தொடங்கப்பட்டுள்ளது. இதற்குத் தழைச்சத்து உரமான யூரியா அதிக அளவில் தேவைப்படும். இதற்காக விசாகப்பட்டினத்திலிருந்து சரக்கு ரயிலில் 42 பெட்டிகளில் ஏற்றப்பட்ட 2,600 டன்கள் யூரியா உரம் தஞ்சாவூருக்கு சனிக்கிழமை வந்தது. பின்னர், இங்கிருந்து தஞ்சாவூர், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

## டிசம்பரில் விதைப் பண்ணை பயிற்சி: நாகை ஆட்சியர்

விதைப் பண்ணை அமைப்பது தொடர்பாக விவசாயிகளுக்கு வரும் டிசம்பரில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது என்றார் நாகை ஆட்சியர் சு. பழனிசாமி.

நாகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு தலைமை வகித்து அவர் பேசியது:

சம்பா மற்றும் தாளடி பருவத்தில் 50,000 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பும் 88,900 ஹெக்டேரில் நடவும் என மொத்தம் 1,38,900 ஹெக்டேரில் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 19,579 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பும், திருந்திய நெல்சாகுபடி முறையில் 2580 ஹெக்டேர் மற்றும் சாதாரண முறையில் 1845 ஹெக்டேர் ஆக மொத்தம் 4425 ஹெக்டேர் நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சம்பா பருவத்தில் பாய் நாற்றங்கால் 70 ஹெக்டேர் சாதாரண நாற்றங்கால் 705 ஹெக்டேர் ஆக மொத்தம் 775 ஹெக்டேர் நாற்றங்கால் இருப்பில் உள்ளது. வேளாண்மைத் துறையில், சான்று பெற்ற நெல் விதைகள் 468 மெ. டன்களும், தனியார் விதை விற்பனை நிலையங்களில் நெல் விதைகள் 636 மெ. டன்களும் இருப்பில் உள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் யூரியா 6060, டிஏபி 2808, பொட்டாஷ் - 1460, காம்ப்ளக்ஸ் - 407 ஆகிய உரங்கள் இருப்பில் உள்ளன.

விதைக் கிராமத் திட்டத்தின் கீழ் கிலோவுக்கு ரூ. 10 மான்யத்தில் 430 மெ.டன் நெல் விதை வழங்க இலக்கு பெறப்பட்டு, நெல் விதை விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தரமான பயறு வகைகளை விதைப் பண்ணைகள் மூலம் கொள்முதல் செய்ய விதைப்பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்கு விதை கிராமத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்த பயிற்சி டிசம்பர் மாதத்தில் அளிக்கப்பட உள்ளது என்றார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. பெஞ்சமின்பாபு, வேளாண்மை இணை இயக்குநர் டி. கணேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பாசனத்துக்கு தண்ணீர் கோரி உம்பளச்சேரி, அருந்தவம்புலத்தில் மறியல்**

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த உம்பளச்சேரி, அருந்தவம்புலம் ஆகிய இடங்களில் பாசனத்துக்கு போதிய அளவு தண்ணீர் கோரி விவசாயிகள் சனிக்கிழமை மறியலில் ஈடுபட்டனர்.

உம்பளச்சேரி பாலம் அருகே அடப்பாறு வழியாக பாமணி மதகிலிருந்து தெற்கு மற்றும் வடக்கு ராஜன் வாய்க்காலில் போதிய அளவு தண்ணீர் திறக்க வலியுறுத்தி ஏஐடியுசி மாவட்டத் தலைவர் கிருஷ்ணன் தலைமையில் மறியல் நடைபெற்றது. வட்டாட்சியர் ப. குமார் பேச்சுவார்த்தை நடத்தி, நடவடிக்கைக்கு உறுதியளித்ததால் மறியல் விலக்கிக்கொள்ளப்பட்டது. அருந்தவம்புலம்: கடைவீதியில்,ஆலத்தம்பாடி மதகு வழியே கோடியவிநாயகநல்லூர் வாய்க்காலுக்கு தண்ணீர் கோரி நடந்த மறியலுக்கு ஜி.கே. பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். பொதுப் பணித் துறை தஞ்சாவூர் கண்காணிப்பு பொறியாளர் சம்பத், உதவி செயற்பொறியாளர் சங்கர், உதவி பொறியாளர் சண்முகம் ஆகியோர் பேசி, ஞாயிற்றுக்கிழமை காலைக்குள் தண்ணீர் கிடைக்க உறுதியளித்தனர். இதையடுத்து மறியல் விலக்கிக்கொள்ளப்பட்டது.

**பெரம்பலூரில் வன உயிரின வார விழா**

மாவட்ட வனத்துறை சார்பில் வன உயிரின வார விழாவை முன்னிட்டு பெரம்பலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளிடையே வனத்துறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஓவியம், பேச்சு மற்றும் வினாடி - வினா போட்டிகள் சனிக்கிழமை நடைபெற்றன. போட்டிகளை வனச்சரக அலுவலர்கள் ரவீந்திர தாஸ்,தர்மலிங்கம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். தொடர்ந்து,போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஓய்வு பெற்ற உதவி கல்வி அலுவலர் ஜெயராமன் பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வனவர்கள் சுப்ரமணியன், பாண்டியன், ராஜாராம், அன்பழகன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**மஞ்சள் பயிரில் இலைத் தீயல் நோயை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு ஆலோசனை**

பெரம்பலூர் மாவட்டத்தில் நிகழாண்டில் சுமார் 1,630 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள் பயிரை டேப்ரினா மேக்குலன்ஸ் எனும் பூஞ்சை தாக்கி இலைத் தீயல் நோய் ஏற்படுத்துகிறது.

மேலும், காற்றின் மூலம் பரவும் தன்மை கொண்ட இந்நோயை உடனடியாகக் கட்டுப்படுத்த வழிமுறைகள்:

இந்நோயால் தாக்கப்பட்ட இலைகளைப் பறித்து தீயிட்டு கொளுத்திவிட்டு, "அசாஸிஸ்ட்ரோபின்' மற்றும் "டைபென்கோனசோல்' எனும் இரு மருந்துகளின் சேர்க்கை கொண்ட பூஞ்சாணக் கொல்லியை 1 லி நீருக்கு 1 மி என்ற அளவில் கலந்து 10 நாள் இடைவெளியில் நோயின் தீவிரத்தைப் பொறுத்து 2 (அ) 3 முறை தெளிக்க வேண்டும்.

மேலும், மஞ்சள் இலைகள் வெளிர் நிறத்தில் காணப்பட்டால், மருந்து தெளிக்கும் போதே நீரில் கரையக்கூடிய 19-19-19 உரத்தை 1 லி நீருக்கு 5 கி என்ற அளவில் கலந்து தெளிக்கலாம் என வாலிகண்டபுரத்தில் உள்ள வேளாண் அறிவியல் மையத் தலைவர் (பொ) ஜெ. கதிரவன் சனிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**டெல்டாவில் தலைமை பொறியாளர் ஆய்வு**

டெல்டா மாவட்டத்தில் சம்பா சாகுபடி நடைபெற்று வரும் பகுதிகளில் சனிக்கிழமை பொதுப்பணித் துறை திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் அசோகன் ஆய்வு மேற்கொண்டார்.

திருவாரூர், முத்துப்பேட்டை, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி மற்றும் நாகப்பட்டினம் பகுதிகளில் உள்ள பாமணியாறு, கோரையாறு, மரைக்கா கோரையாறு, அரிச்சந்திராநதி, முள்ளியாறு, அடப்பாறு, பாண்டவையாறு, வெள்ளையாறு, வெண்ணாறு, வெட்டாறு பாசனப் பகுதிகளில் நீர்பங்கீடு நடைபெறுவதை அவர் ஆய்வு செய்தார்.

பாசனப் பகுதிகளில் தேவையறிந்து தண்ணீர் வழங்கவும், கடைமடைப் பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தி தண்ணீர் விரைந்து செல்ல நடவடிக்கை எடுக்கவும் பொதுப்பணித்துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

வெண்ணாறு வடிநிலக் கோட்ட செயற் பொறியாளர்கள் ரவிச்சந்திரன்(திருவாரூர்), இளங்கோ(தஞ்சாவூர்), உதவி செயற்பொறியாளர்கள் மரியசூசை, சுப்பையன், சுகேந்திர ன்,

மூர்த்திராஜன், சங்கர், ராஜேந்திரன் மற்றும் சிதம்பரநாதன், தங்கமுத்து உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**சம்பாவுக்கு தண்ணீர் பெற்றுத் தர விவசாயிகள் வலியுறுத்தல்**

சம்பா பயிருக்கு போர்க்கால அடிப்படையில் கர்நாடகத்திடம் தண்ணீர் பெற்று வழங்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குறைதீர்க் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

வெ. சத்யநாராயணன் (டெல்டா விவசாயிகள் பாதுகாப்பு குழுமம்): டெல்டா பகுதிக்கு வயலுக்கு பாயும் அளவுக்கு முழுமையாக தண்ணீர் பெற்றுத் தர போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெல்லுக்குரிய விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், முதல்வர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் நெல் குவிண்டாலுக்கு ரூ. 200 கூடுதலாக அறிவிக்க வேண்டும். சா.வீ. ராமகிருஷ்ணன் (ஆற்றுப்பாசன சங்கத் தலைவர்): கங்களாஞ்சேரி கூட்டுறவு வங்கியில் இதுவரை வேளாண் கடன் வழங்கவில்லை. மாவட்ட நிர்வாகம் விவசாயிகளுக்கு கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். 1009 ரக நெல்லுக்கு நிறுத்தப்பட்டுள்ள மானியத்தை மாநில அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

சாத்தப்பன் (நீடாமங்கலம்): 2012-2013ஆம் ஆண்டில் விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். விதை நெல்லுக்கு மானியம் வழங்க வேண்டும். ஆர். ஜெயராமன் (திருத்துறைப்பூண்டி): வேளாண்துறை, வேளாண் பொறியியல் துறை ஒரு கூட்டு முயற்சியாக பணிகள் மேற்கொண்டிருந்தால் இருக்கும் நீரை கடைமடைப் பகுதிகளுக்கு கொண்டு சென்றிருக்கலாம். எனவே வேளாண் அலுவலர்கள் பாசனப் பகுதிகளுக்கு சென்று ஆய்வு செய்து சம்பா பயிரைக் காக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

துரைராஜ்: பெருங்குடி, கேத்தனூர், பூந்தோட்டம், ஹரித்துவாரமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயம் செய்ய முடியாத வகையில் பாசன வாய்க்கால்கள் தூர்வார வேண்டும்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் த. மோகன்ராஜ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் ஆ. அழகிரிசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நதிநீர் இணைப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை

கூட்டத்தில் நாகை மக்களவை உறுப்பினர் கே. கோபால் பேசியது:

மேட்டூர் அணை கட்டப்பட்டதிலிருந்து இதுவரை சுமார் 15 முறை மட்டுமே ஜூன் 12ஆம் தேதி பாசனத்துக்கு திறக்கப்பட்டுள்ளது. தமிழகம், கர்நாடகத்தில் மழை இல்லாததால் அணை குறிப்பிட்ட நாளில் திறக்கமுடியாத நிலை ஏற்படுகிறது. கர்நாடகம் பாசனப் பரப்பை உயர்த்திக் கொண்டே வருவதும் குறித்த காலத்தில் மேட்டூர் அணை திறக்கப்படாததற்கு காரணமாகும். தமிழகத்தில் தண்ணீர் உற்பத்தி வளம் இல்லை. தண்ணீருக்கு பிற மாநிலங்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. மத்தியில் ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சியும் நதிநீர் இணைப்புக்கு முக்கியத்துவம் அளிக்க முன் வருவதில்லை. தமிழக அரசு மட்டும் விவசாயிகளை காக்கும் அரசாக உள்ளது என்றார்.

**விவசாயத்துக்கு தனி நிதிநிலை அறிக்கை வேண்டும்**

விவசாயத்துக்கு தனி நிதிநிலை அறிக்கை வேண்டும் என திமுக தேர்தல் குழுவிடம் விவசாயிகள் வலியுறுத்தினர். திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவின் கடலூர் மாவட்ட கருத்துக் கேட்புக்கூட்டம் சிதம்பரம் கீழரதவீதியில் உள்ள தனியார் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திமுக உயர்மட்டக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கனிமொழி எம்.பி., துணைப் பொதுச்செயலர் சுப்புலட்சுமி ஜெகதீசன், வி.பி.துரைசாமி, டி.கே.எஸ்.இளங்கோவன், முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, பேராசிரியர் ராமசாமி, வழக்குரைஞர்கள் சண்முகசுந்தரம், இளங்கோவன் ஆகியோர் கொண்ட தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினர் மற்றும் கடலூர் மாவட்டச் செயலர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வே.கணேசன் உள்ளிட்டோர் கருத்துகளைக் கேட்டு மனுக்களை பெற்றனர்.

கூட்டத்தில் சிதம்பரம், கடலூர், காட்டுமன்னார்கோவில், புவனகிரி, சேத்தியாத்தோப்பு, குறிஞ்சிப்பாடி, நெய்வேலி, பண்ருட்டி, விருத்தாசலம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வந்த வர்த்தகர் சங்கத்தினர், நகை

வியாபாரிகள் சங்கம், கட்டடத்தொழிலாளர்கள் சங்கம், அரசுப் போக்குவரத்து தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தினர், கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கம், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசன விவசாயிகள் சங்கம், பாசிமுத்தான்ஓடை விவசாயிகள் சங்கம், கான்சாகீப்வாய்க்கால் விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட சங்கத்தினர் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்து குழுவினரிடம் கருத்துகளை தெரிவித்தனர். கூட்டத்தில், கேரளம், கர்நாடக மாநிலங்களில் உள்ளது போல், விவசாயத்துக்கு தனியாக நிதிநிலை அறிக்கை தேவை. இயற்கை விவசாயத்துக்கு 50 விழுக்காடு ஒதுக்கீடு தேவை. நாட்டில் 70 சதவீதம் விவசாயத்தையே தொழிலாக கொண்ட விவசாயிகளுக்கு தமிழக நிதிநிலை அறிக்கையில் 70 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும், பயிர் காப்பீட்டுக்கான சந்தா தொகையை அரசே செலுத்த வேண்டும். தெலுங்கானா, ஆந்திரம் போன்று ஒரு லட்சம் வரை விவசாய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும், எனக் குழுவினரிடம் கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி தெரிவித்தார். நாகப்பட்டினம், தஞ்சை, திருவாரூர் மாவட்டங்கள் போல கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், புவனகிரி வட்டங்களும் காவிரி பாசனப் பகுதிகளாகும். எனவே பாசன வாய்க்கால் ஆதாரங்கள் தூர்வாரும் பணிகளுக்கு பாரபட்சமின்றி கடலூர் மாவட்டத்துக்கும் நிதி ஒதுக்கீடு செய்து, ஆண்டு தோறும் ஜூன் மாதத்துக்கு முன்பே தூர்வார வேண்டும். வீராணம் ஏரியிலிருந்து தண்ணீரை விவசாயத்துக்கு தராமல் விவசாயிகளின் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் பாசனத்துக்கு வீராணம் ஏரியிலிருந்து முன்னுரிமை அளித்து நீர் திறந்துவிட வேண்டும் என சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசன விவசாயிகள் நலச்சங்கத்தினர் கோரிக்கை விடுத்து மனு அளித்தனர்.

**இயற்கை உணவு திருவிழா**

புதுச்சேரி அம்மா சமூக சேவா மையம் மற்றும் பாரம்பரிய சித்த மருத்துவ பாதுகாப்பு இயக்கம் சார்பில் இயற்கை உணவுத் திருவிழா கண்காட்சி விவேகானந்தா மேல்நிலைப் பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தலைவர் இளங்கோவன் வரவேற்றார். லாஸ்பேட்டை எம்.எல்.ஏ. மு. வைத்தியநாதன் பங்கேற்று விழாவைத் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகள், இயற்கை உணவுகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இதில் அம்மா சமூக சேவா மைய கண்ணம்மாள், செயலாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏராளமானோர் கண்காட்சியை பார்வையிட்டனர்.

**நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை**

அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால், அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக அணைப்பகுதிகள் உள்பட மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழையினால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவுகிறது. மேலும், அணைகளுக்கு நீர்வரத்தும் தொடர்ந்து அதிகரித்தபடி உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நீர்த் திறப்பு: இந்நிலையில் மாவட்டத்தின், முதல் பருவமான கன்னிப்பூ நெல் அறுவடைப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. மேலும், மறு பருவமான கும்பப் பூ பருவத்திற்கான முதற்கட்டப் பணிகளும் தொடங்கியுள்ளதையடுத்து, அணைகளிலிருந்து பாசனத்திற்காக தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

தற்போது பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு மற்றும் மாம்பழத்துறையாறு உள்ளிட்ட அனைத்து அணைகளிலிருந்தும் தண்ணீர் பாசனத்திற்காக சென்று கொண்டிருக்கிறது.

அனைத்து அணைகளிலும் தண்ணீர் இருப்பு 60 சதவீதத்துக்கும் அதிமாக உள்ள நிலையில், தொடர்ந்து பெய்து வரும் மழையால் அணைகளில் நீர்மட்டம் மேலும் உயர்ந்து வருகிறது. இதனால் இரண்டாம் போகமான கும்பப்பூ பருவத்திற்கு தட்டுப்பாடின்றி தண்ணீர் விநியோகம் செய்ய முடியும் என விவசாயிகள் நம்புகின்றனர்.

பயிர்கள் சேதம்: இதனிடையே, தற்போதைய மழையால் கரையோரப் பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள வாழைகள், மரச்சீனி, தென்னை உள்ளிட்டப் பயிர்களுக்கு தேவையான அளவுக்கு தண்ணீர் கிடைத்து வருகிறது. அதேவேளையில், மழையுடன் வீசும் சூறைக் காற்று காரணமாக வாழைகள், ரப்பர் மரங்கள் சாய்ந்து நஷ்டம் ஏற்படுவதால் விவசாயிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். எனவே, பயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசு போதிய இழப்பீடு வழங்க வேண்டுமென்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரி வருகின்றனர்.

**மலைப்பகுதியில் மழை: தலையணையில் நீர்வரத்து அதிகரிப்பு**

களக்காடு மலைப்பகுதியில் சனிக்கிழமை மாலை பெய்த பலத்த மழையால் தலையணை ஆற்றில் ஞாயிற்றுக்கிழமை நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. இதையடுத்து, சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

களக்காடு பகுதியில் கடந்த ஒரு மாதமாக கடும் வெப்பம் நிலவி வந்தது. இந்நிலையில் சனிக்கிழமை மாலையில் பலத்த மழை பெய்வதற்கான அறிகுறிகள் தோன்றின. இந்நிலையில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்தது. இதையடுத்து தலையணை ஆற்றில் ஞாயிற்றுக்கிழமை காலையில் நீர்வரத்து அதிகரித்தது. இந்த மழையால் தேங்காய்உருளி அருவி, கோழிக்கால் அருவியிலும் தண்ணீர் கொட்டுகிறது. சிவபுரம் ஆற்றிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மலைப்பகுதி ஆறுகளில் நீர்வரத்து காணப்பட்டாலும், அங்கு ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயம் நடைபெறுவதால் இந்த தண்ணீர் அங்கு மடைமாற்றி விடப்படுகிறது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாசிப்பருப்பு, மிளகாய் வத்தல், புளி விலை உயர்வு

சென்னை: துவரம் பருப்பை தொடர்ந்து, மற்ற பருப்புகளின் விலையும், கிலோவுக்கு, 15 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. மிளகாய் வத்தல், புளி விலையும் அதிகரித்துள்ளது, பொதுமக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.ஒரு மாதத்திற்கு முன், கிலோ, 125க்கு விற்ற, முதல்ரக துவரம் பருப்பு, தற்போது, 25 ரூபாய் அதிகரித்து, 150 ரூபாய்க்கும்; இரண்டாம் ரகம், 140க்கும் விற்கப்படுகிறது. இந்நிலையில், உளுந்தம் பருப்பு மற்றும் பாசிப்பருப்பு விலையும் உயர்ந்துள்ளது. கடந்த வாரம், கிலோ, 125க்கு விற்ற உளுந்தம் பருப்பு, 140 ரூபாயாகவும்; 105க்கு விற்ற பாசிப்பருப்பு, 115 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளது. குண்டு மிளகாய் வத்தல், 115லிருந்து, 140 ரூபாயாகவும்; நீள மிளகாய், 120லிருந்து, 160 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு, நடுத்தர மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறியதாவது:வட மாநிலங்களில் உற்பத்தி குறைந்ததாலும், பதுக்கல் மற்றும் 'ஆன் - லைன்' வர்த்தகத்தாலும், உளுந்தம் பருப்பு மற்றும் பாசிப்பருப்பு விலை அதிகரித்துள்ளது. ஆந்திராவில் இருந்து நீள மிளகாய் வரத்து குறைந்துள்ளதாலும், தமிழகத்தில், அதன் விலை உயர்ந்துள்ளதாலும், குண்டு மிளகாயும் விலை கூடியுள்ளது.இவ்வாறு அவர் கூறினார். எண்ணெய்க்கான இறக்குமதி வரியை, மத்திய அரசு, 5 சதவீதம் உயர்த்தி உள்ளது. இதனால், பாமாயில் விலை, 10 நாட்களில், ஒரு லிட்டர், 46லிருந்து, 52 ரூபாயாகவும், சன் பிளவர் எண்ணெய், 78லிருந்து, 85 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளது.

காய்கறி விலையும் அதிகரிப்பு:புரட்டாசி மாதம் முழுவதும், பலர் இறைச்சி உணவுகளை தவிர்த்து விடுவர். இதனால், பல மாவட்டங்களில், காய்கறி மார்க்கெட், உழவர் சந்தை உள்ளிட்ட இடங்களில், காய்கறி விற்பனை அதிகரித்துள்ளது. அதேநேரத்தில், வரத்து குறைந்துள்ளதால் கேரட், முட்டைக் கோஸ், உருளை, வெண்டை

உள்ளிட்ட காய்கறிகளின் விலை, கிலோவுக்கு, 3 முதல் 5 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

## மழை பெய்ய வாய்ப்பு

சென்னை:தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நேற்று முன்தினம் நள்ளிரவு, இடியுடன் கூடிய மழை பெய்தது. சென்னை மற்றும் புறநகரின் சில இடங்களிலும் இடியுடன் மழை பெய்தது. அதிகபட்சமாக, நெல்லையில் - 8, திருவண்ணாமலையில் - 7, நீலகிரியில் - 6 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த, 24 மணி நேரத்துக்கு பரவலாக மழை பெய்யக்கூடும். உள்மாவட்டங்களில், பெரும்பாலான இடங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

## மேட்டூர் அணை நீர்வரத்து உயர்வு

மேட்டூர்;கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவதால், நேற்று, மேட்டூர் அணை நீர்வரத்து வினாடிக்கு, 27,442 கனஅடியாக அதிகரித்தது.நீர்வரத்து குறைந்ததாலும், பாசனத்துக்கு நாள் ஒன்றுக்கு, 1.25 டி.எம்.சி., நீர் வெளியேற்றியதாலும், கடந்த ஆக., 9ம் தேதி, 60.41 டி.எம்.சி.,யாக இருந்த மேட்டூர் அணை நீர்இருப்பு, 25ம் தேதி, 29.73 டி.எம்.சி.,யாக குறைந்தது.கடந்த வாரம் கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து நீர் திறந்ததால், மேட்டூர் அணைக்கு, நேற்று முன்தினம், 15,060 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 27,442 கனஅடியாக அதிகரித்தது.அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 12,000 கனஅடி நீர் திறக்கப்படும் நிலையில், நீர்வரத்து அதிகரித்தால், அணை நீர்மட்டம், நேற்று, 68.20 அடியாக உயர்ந்தது. இரு நாட்களில் நீர்மட்டம், 2 அடியும், நீர் இருப்பு, 2 டி.எம்.சி.,யும் உயர்ந்து உள்ளது.

## கரும்பு விவசாயிகளுக்கு ரூ.22 ஆயிரம் கோடி கடன் பாக்கி

மதுரை;"இந்தியா முழுவதும் சர்க்கரை ஆலை உரிமையாளர்கள், கரும்பு விவசாயிகளுக்கு ரூ.௨௨ ஆயிரம் கோடிக்கும் மேலாக பாக்கி தர வேண்டியுள்ளது" என அகில இந்திய விவசாயிகள் சங்க துணை தலைவர் பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ., கூறினார். மதுரையில் அவர் கூறியதாவது: மற்ற விவசாயிகளை போல், கரும்பு விவசாயிகளின் வாழ்வு நலிவடைந்து வருகிறது. மத்திய, மாநில அரசுகளின் மோசமான கொள்கையினால் விவசாயிகள் தற்கொலை அதிகரித்துள்ளது. கரும்பு உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது. கரும்புக்கு விலை நிர்ணயிக்க கூடிய மத்திய, மாநில அரசுகள் கட்டுப்படியான விலையை தீர்மானிக்கவில்லை.மத்திய அரசு ஒரு விலையை தீர்மானித்து, மாநில அரசு அதற்கு மேலே பரிந்துரை விலையாக ஒரு விலையை தீர்மானிக்கிறது.

ஆனால், நாடு முழுவதும் உள்ள சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் மாநில அரசு பரிந்துரை செய்த விலையை, நாங்கள் கொடுக்க முடியாதென்று மறுத்து வருகின்றனர். இதனால் நாடு முழுவதும் ரூ.௨௨ ஆயிரம் கோடிக்கும் மேலாக கரும்பு விவசாயிகளுக்கு பாக்கி தர வேண்டியுள்ளது. இதில் தமிழகத்தின் பங்கு ரூ.800 கோடி.விவசாயிகள் வாங்கிய கடனுக்கு அபராத வட்டி ஏறிக் கொண்டிருக்கிறது. இந்நிலை நீடித்தால், சர்க்கரை ஆலைகளை மூட வேண்டியது வரும். கரும்பு விவசாயிகளை ஒருங்கிணைத்து, நாடு தழுவிய போராட்டம் நடத்துவது குறித்து முடிவு எடுக்கப்படும், என்றார்.

## வியாபார நோக்கத்தில், 'மினரல் வாட்டர்' சுத்திகரிப்பு முறை பின்பற்றாத நிறுவனங்கள்



கோவை: மினரல் வாட்டர் என்ற பெயரில் சுத்திகரிப்பு முறைகள் எதையும் பின்பற்றாமல், தரச்சான்று வாங்காமல் கிடைக்கும் தண்ணீரை கேன்களில் அடைத்து, மோசடியாக வியாபாரம் செய்வது, அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

மனிதனுக்கு மட்டுமின்றி உயிரினங்கள் அனைத்துக்கும் இன்றியமையாதது தண்ணீர். இந்த தண்ணீருக்கு தான் அண்டை மாநிலங்களுடன் தீராத பிரச்னைகள் நிலவுகின்றன. மனித உடலில் ஜீரணம், வியர்வையை வெளியேற்றுதல், உடல் வெப்பநிலையை சமமாக வைத்திருத்தல், சத்துக்களை எடுத்து செல்லுதல், திட, திரவ கழிவுகளை வெளியேற்றுதல், ரசாயன மாற்றம் நிகழ்தல் போன்றவற்றுக்கு அடிப்படையாக இருப்பது தண்ணீர் தான். இந்தளவு இன்றியமையாத தண்ணீரை, சத்துக்கள் நீக்கி நாம் அருந்தி வருகிறோம். தற்போது அரசு அதிகாரிகள் முதல் அடித்தட்டு மக்கள் வரை அனைவரும் மினரல் வாட்டரை தான் பயன் படுத்துகின்றனர். இந்த மினரல் வாட்டரில் போதிய அளவில் சத்துக் கள் இல்லாமல், உடலுக்கு தீங்கு விளைவிப்பதே உண்மை. இயற்கை நீர்நிலை ஆதாரங்களில் கிடைக்கும் தாதுக்கள் (மினரல்ஸ்) நிறைந்த தண்ணீரை எடுத்து அதில் படிந்துள்ள துகள்களையும், கால்சியம், பொட்டாசியம், மெக்னீசியம் போன்ற தாது உப்புக்களையும், நீரின் அமில தன்மை, கார தன்மை போன்றவற்றையும் சுத்திகரிப்பு என்ற பெயரில் நீக்குகின்றனர். தொடர்ந்து பாக்டீரியா, வைரஸ் கிருமிகளை நீக்க வேதிப்பொருட்களை கலந்து, சுவைக்காக சில வேதிபொருட்களையும் சேர்த்து, வடிகட்டுகின்றனர்.

இதனால் கிடைக்கும் கண்ணாடி போன்ற நீரினை எடுத்து பாட்டில்களிலும், கேன்களிலும் அடைத்து கவர்ச்சியான விளம்பரத்துடன் விற்பனை செய்வதே, இந்த மினரல் வாட்டர். கோவை உள்ளிட்ட இடங்களில் பல மினரல் வாட்டர் தயாரிப்பு நிறுவனங்கள், அறிவுறுத்தப்பட்ட சுத்திகரிப்பு முறைகளை பின்பற்றாமல், ஐ.எஸ்.ஐ., தரச்சான்று வாங்காமல் கிடைக்கும் நீரை எடுத்து கேன்களில் அடைத்து விற்பனை செய்து, கொள்ளை லாபம் பார்க்கின்றன.

சுத்திகரிக்காத மினரல் வாட்டரில் வைரஸ் கிருமிகள் அதிகம்

காணப்படுவதால், வயிற்று போக்கு, குடல் புழுக்கள், சிறுநீரக கோளாறு, எலும்பு சார்ந்த நோய்கள், அதிகளவு ஏற்பட வாய்ப்புள்ளதாக டாக்டர்கள் எச்சரிக்கின்றனர். கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை 'டீன்' எட்வின் ஜோ கூறுகையில், "சுத்திகரிப்பு இல்லாமல் மினரல் வாட்டரால் வாய் வழியாக பாக்டீரியா, கிருமிகள் நேரடியாக உள்ளே செல்லும். இதனால், காலரா, வாந்தி, பேதி, அஜீரண கோளாறு, வயிறு உபாதைகள் ஏற்படும். வைரஸ் கிருமிகள் தாக்கி, தொற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது. வீரியமிக்க வைரஸ் உள்ளே செல்லும்போது நரம்பு மண்டலத்தில் பாதிப்பு ஏற்படுத்தும்" என்றார்.

## வறட்சி, தொடர் மின் வெட்டால் சம்பா நடவுப் பணிகள் பாதிப்பு




விருத்தாசலம்: கடுமையான வறட்சி, மின் வெட்டு போன்ற காரணங்களால் சாகுபடி செய்துள்ள காய்கறி, பூக்கள், சம்பா நெற்பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் கடலூர், பண்ருட்டி, விருத்தாசலம், குள்ளஞ்சாவடி, சிதம்பரம், குறிஞ்சிப்பாடி உள்ளிட்ட பகுதிகளில் வாழை 10 ஆயிரம் ஏக்கர், பூ 374, காய்கறி 2,000 ஏக்கரில் சாகுபடி செய்துள்ளனர். இம்மாதம் துவக்கத்தில் முன்பட்ட சம்பா பருவ நேரடி நெல் விதைப்பு,

நாற்றாங்கால் விதைப்பு பணிகள் விவசாயிகள் மேற்கொண்டனர்.

தென்மேற்குப் பருவமழை பொய்ப்பு, கடுமையான வறட்சிக்கிடையே, போர்வெல் பாசன விவசாயிகள், மிகுந்த சிரமத்துடன் பயிர்களை பராமரித்து வந்தனர். இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக பகல் மற்றும் இரவு நேரங்களில் அறிவிக்கப்படாத மின் வெட்டு தொடர்கிறது. இதேபோல், போர்வெல் பாசனத்திற்கான மும்முனை மின்சாரமும் அறிவிக்கப்படாமல் மின் வெட்டு ஏற்படுகிறது. இதனால் பாசனத்திற்கு போதிய தண்ணீரின்றி காய்கறி, வாழை, பூ செடிகள், சம்பா நெற்பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதேபோல், சம்பா நடவுப் பணிகளும் பாதித்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

எனவே, நெல் மற்றும் தோட்டப் பயிர்களைக் காக்க தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டும்.மாவட்ட உழவர் மன்ற தலைவர் ரவீந்திரன் கூறுகையில், 'சிதம்பரம் பகுதியில் நாளைக்கு பகல், இரவு என மொத்தம் 6 மணி நேரம் மட்டுமே மின்சாரம் வழங்கப்படுகிறது. அதேபோல், குறிஞ்சிப்பாடி, காட்டுமன்னார்கோவிலில் இரவில் மட்டும் ஒரு மணி நேரம் விட்டு ஒரு மணி நேரம் என 6 மணி நேரம் மட்டும் மின்சாரம் வழங்கப்படுகிறது. மாவட்டத்தின் மற்ற பகுதிகளின் நிலையும் இதுதான். இதனால், காய்கறி, பூ, வாழை, சம்பா நெற்பயிர்கள் மற்றும் நடவுப் பணிகள் பாதித்துள்ளன' என்றார்.

**ஒட்டன்சத்திரத்தில் விதைப்பு பணி தீவிரம் விவசாய தொழிலாளர் பற்றாக்குறை**

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரத்தில் மக்காச்சோளம் விதைப்பு பணிகள் மும்முரமாக நடப்பதால், விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இவர்களின் கூலி உயர்ந்துள்ளது.

ஒட்டன்சத்திரத்தை சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் ஆடி மாதம் மழை பெய்யாமல் போனதால், மானாவாரி நிலங்களில் விதைப்பு பணிகள் துவங்கப்படாமல் இருந்தது. மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி,

பொருளூர் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் வறண்ட நிலத்தில் மக்காச் சோளம் விதைக்கப்பட்டிருந்தது. விதைக்கப்பட்ட பல நாட்களான பின்பும் மழை பெய்யாததால் மண்ணுக்குள்ளேயே விதைகள் மக்கி விட்டன. சில இடங்களில் விதை முளைத்து பயிர் மேலே வந்த பின்பும், தண்ணீர் இல்லாததால் கருகின. விவசாயிகள் கடந்த மாதம் பெய்த மழையை பயன்படுத்தி ஒரு சில கிராமங்களில் உழவுப் பணி மட்டும் செய்து முடித்தனர்.

சில நாட்களுக்கு முன்பு இப்பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் மானாவாரி நிலங்களில் விவசாயிகள் மக்காச்சோளம்,பருத்தியை பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர். தொடர்ந்து மழை இல்லாததால், ஈரம் உலர்வதற்குள் விதைத்து விட வேண்டும் என்று அனைவரும் ஒரே சமயத்தில் விதைப்பு பணிகளை துவங்கியனர். இதனால் விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சிலர் கூலியை உயர்த்தி கொடுக்க துவங்கினர். ரூ.150 முதல் ரூ.200 ஆக இருந்த தொழிலாளர் கூலி, தற்போது ரூ.250 க்கு உயர்ந்து விட்டது. கூலியை அதிகரித்துத் தர தயாராக இருந்த போதிலும், தொழிலாளர்கள் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

## காளான் வளர்ப்பு குறித்த பயிற்சி

தலைவாசல்: தலைவாசல் அருகே, வீரகனூரில், தந்தை ரோவர் வேளாண் கல்லூரி மாணவியர், காளான் வளர்ப்பு குறித்து, விவசாயிகளுக்கு செயல் விளக்க முகாம் நடத்தினர். தலைவாசல் அருகே, வீரகனூர் பகுதியில் முகாமிட்டுள்ள, பெரம்பலூர் தந்தை ரோவர் வேளாண் கல்லூரி மாணவியர், விவசாயிகளுக்கு, வேளாண் பயிர் சாகுபடி, தொழில் நுட்பம் குறித்து, செயல்விளக்க முகாம் நடத்தி வருகின்றனர். நேற்று, காளான்

வளர்ப்பது, அத்தொழிலில் கிடைக்கும் வருவாய் உள்ளிட்ட விவரங்களை, எடுத்துரைத்தனர்.

## ஆடு வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி

பனமரத்துப்பட்டி: சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், அக்டோபர் 1ம் தேதி, பரண் மேல் வெள்ளாடு வளர்ப்பு தொழில் நுட்ப பயிற்சி நடக்கிறது. இது குறித்து, சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீராம் கூறியதாவது: வேளாண் சார்ந்த உப தொழிலில், வெள்ளாடு வளர்ப்பு, குறைந்த முதலீட்டில், நிறைய லாபம் தரும் தொழிலாக உள்ளது. விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் இளைஞர்கள் பயன் பெறும் வகையில், அக்டோபர் , 1ம் தேதி, காலை, 9.30 முதல் மாலை, 4 மணி வரையில், சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், பரண் மேல் ஆடு வளர்ப்பு தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர், 30ம் தேதிக்குள் தங்கள் பெயரை, 0427-2422550 எண்ணில் பதிவு செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

## கர்நாடகா டீலக்ஸ் அரிசி மூட்டைக்கு ரூ.200 உயர்வு

ஈரோடு: கர்நாடகா டீலக்ஸ் பொன்னி அரிசி, 75 கிலோ மூட்டை கொண்ட ஒரு மூட்டை மொத்த விலையில், 200 ரூபாய் அதிகரித்துள்ளதாக, அரிசி ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் கந்தசாமி தெரிவித்தார். அரிசி விலை சமீப காலமாக, ஏற்றம், இறக்கம் கண்டு வருகிறது. அதன்படி, ஈரோடு அரிசி சந்தையில் கர்நாடகா பொன்னி அரிசி, ஒன்றரை ஆண்டு பழையது. 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை, 3,500 முதல், 3,600 ரூபாய், ஓராண்டு கர்நாடகா பொன்னி பழைய அரிசி, 3,200 முதல், 3,300, தமிழ்நாடு பி.பி.டி., ஒன்றரை ஆண்டு பழையது, 3,300 முதல், 3,350 ரூபாய், ஓராண்டு பழையது, 2,900 முதல், 3,000 ரூபாய் என்ற விலையில் வியாபாரிகள் விற்பனை செய்து

வருகின்றனர். மேலும், அதிசய பொன்னி, 75 கிலோ கொண்ட மூட்டை பழையது, 2,600 முதல், 2,700 ரூபாய், புதுசு, 2,100 முதல், 2,200, ஏ.டி.டி., 45 ஒரு மூட்டை, 1,900 முதல், 2,000 ரூபாய், இட்லி அரிசி, 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை, 1,900 முதல், 1,950 ரூபாய், ஐ.ஆர்.20 பழைய அரிசி, 2,050 முதல், 2,150 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கர்நாடகா டீலக்ஸ் பொன்னி மட்டும் வரத்து குறைந்துள்ளதால், மூட்டைக்கு, 200 ரூபாய் உயர்ந்துள்ளது. தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி, தேனி, கம்பம், மாயவரம், கொல்லிமலைப்பகுதியில் நெல் அறுவடை சீஸன் துவங்கி உள்ளதால், அரிசி விலை குறைய வாய்ப்புள்ளதாக, தெரிவித்தார்.

**மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி**

மஞ்சூர் n மஞ்சூர் பகுதிகளில் நீண்ட இடைவேளைக்கு பிறகு கன மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மஞ்சூர் பகுதிகளில் கடந்த சில மாதங்களாக மழை பெய்யவில்லை. இதனால், மலை காய்கறி விவசாயம் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டதை அடுத்து விவசாயிகள், 'ஸ்பிரிங்லர்' உதவியுடன் நீர் பாய்ச்சி வருகின்றனர். அதேபோல, தேயிலை தோட்டங்களுக்கு மழை தேவைப்பட்டது. இந்நிலையில், மழையை எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகளுக்கு, மகிழ்ச்சி ஏற்படுத்தும் விதமாக, நேற்று முன்தினம் மதியம், ஒரு மணி நேரம் மஞ்சூர், நஞ்சநாடு, முத்தோரை பாலாடா, இத்தலார், எமரால்டு, அப்பர்பவானி, அவலாஞ்சி சுற்றுப்புற பகுதிகளில் கன மழை பெய்தது. சாலைகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டது. தாழ்வான பகுதியில் மழை வெள்ளம் தேங்கியதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். நீண்ட இடைவெளிக்கு பிறகு கன மழை பெய்ததால், மலை காய்கறி மற்றும் தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**மரக்கன்றுகளை வளர்ப்பதற்கு புதிய முறையில் தண்ணீர் தெளிப்பு**

பந்தலூார்: பந்தலூார் அருகே கொளப்பள்ளி குறிஞ்சி நகர் பகுதியில் மரக்கன்றுகளை வளர்ப்பதற்கு புதிய முறையில் தண்ணீர் தெளிப்பு

பணியில் இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். பந்தலுார் அருகே கொளப்பள்ளி குறிஞ்சிநகர் பகுதியில் சாலையோரத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டது. நடவு செய்த மரங்களை பாதுகாப்பாக வளர்க்கும் வகையில் அதனை சுற்றி தடுப்பு அமைத்துள்ளனர். மேலும், கோடை வெயிலில் செடி கருகாமல் பாதுகாப்பாக வளரும் வகையில், அதன் மேல் பகுதியில் ஒரு 'பிளாஸ்டிக்' டப்பாவில் தண்ணீர் ஊற்றி அதனை சொட்டுநீர் பாசன முறையில் தெளித்து வருகின்றனர். இதனால், மரக்கன்றுகள் காய்ந்து போகாமல் செழிப்பாக வளரும் தன்மையை பெற்றுள்ளது. இதே நிலையில் சேரங்கோடு முழுவதும் பின்பற்றி, அந்தந்த பகுதி மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் இளைஞர் மன்றங்களிடம் ஒப்படைத்தால், மரக்கன்றுகளும் நல்ல நிலையில் வளரும் என்பதுடன், வீணாகி குப்பையில் வீசியெறியும் பிளாஸ்டிக் டப்பாக்களும் வீணாகாமல் பயன்படுத்தடும் என, வலியுறுத்தப்பட்டுள்ளது.

## இழப்பீடு ஆணையத்தை கலைக்க கூடாது: பாசன விவசாயிகள் நலசங்கம் கோரிக்கை

வேலாயுதம்பாளையம்: 'இழப்பீடு ஆணையத்தை கலைக்கும் முயற்சியில் ஈடுபடுவதை கைவிட வேண்டும்' என, நொய்யல் பாசன விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. கரூர் மாவட்டம், நொய்யலில், பாசன விவசாயிகள் நலசங்க பொதுக்குழுக் கூட்டம் நடந்தது. இதில், சங்க தலைவர் நொய்யல் ராமசாமி தலைமைவகித்தார். கூட்டத்தில், கடந்த, 1990 முதல், 25 ஆண்டுகளாக திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களை சேர்ந்த, 70 ஆயிரம் ஏக்கர், நொய்யல் ஆற்றில் வரும் சாயக்கழி நீரால் பாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, 75 கோடி ரூபாய் நஷ்ட ஈடு வழங்க தீர்ப்பு வழங்கியும் இன்னும் விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. நொய்யல் ஆற்றில் திருப்பூர் சாயக்கழிவு நீர் கலக்காமல் தடுத்து, நல்ல தண்ணீரை அணையில் தேக்கி பாசன வாய்கால் மற்றும் மதகுகளை சரிசெய்து பாசன வசதி செய்து கொடுக்கவேண்டும், இழப்பீடு ஆணையத்தை கலைக்க முயற்சிப்பதை கைவிட்டுவிட்டு இழப்பீட்டு ஆணையத்திற்கு தலைவரை

மத்திய அரசு நியமிக்க வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## சம்பா சாகுபடிக்கு தண்ணீர் பற்றாக்குறை: 30 டி.எம்.சி., தண்ணீர் பெற விவசாயிகள் வலியுறுத்தல்

திருச்சி: 'சம்பா சாகுபடிக்கு திறக்கப்பட்டுள்ள தண்ணீர் பற்றாக்குறையாக இருப்பதால், அவசர தேவை கருதி, கர்நாடகாவிடம் இருந்து, 30 டி.எம்.சி., தண்ணீரை பெற்றுத் தர வேண்டும்' என, டெல்டா மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கர்நாடகா அரசு, தமிழகத்துக்கு தர வேண்டிய காவிரி தண்ணீரை தராததால், தமிழகத்தில் குறுவை சாகுபடி செய்யப்படவில்லை. சம்பா சாகுபடிக்கு திறக்கப்பட்டுள்ள தண்ணீரும் பற்றாக்குறையாக இருப்பதால், வறட்சியை தாக்குப்பிடிக்க முடியாமல், நெல் வயல்கள் காய்ந்து வருகின்றன. கர்நாடகா அரசு, ஆண்டுதோறும், ஜனவரி மாதம் முதல் டிசம்பர் வரை, தமிழகத்துக்கு, 192 டி.எம்.சி., தண்ணீர் தர வேண்டும் என்று, காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், ஜூன் மாதத்தில் இருந்து தான், தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில், 84 டி.எம்.சி., தண்ணீரும், செப்டம்பர் மாதத்தில், 40 டி.எம்.சி., தண்ணீரும் திறந்திருக்க வேண்டும். ஆனால், இதுவரை, 51 டி.எம்.சி., தண்ணீர் மட்டுமே தரப்பட்டுள்ளது. கர்நாடகா அரசு, 73 டி.எம்.சி., தண்ணீர் தராமல் ஏமாற்றியுள்ளது. இந்நிலையில், காவிரி கண்காணிப்புக் குழு கூட்டம், டில்லியில் இன்று நடக்கிறது. இந்த கூட்டத்தில், தமிழககத்துக்கு, கர்நாடகா அரசு தரவேண்டிய தண்ணீரை, மத்திய அரசு பெற்றுத் தர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது.

இது குறித்து டெல்டா மாவட்ட விவசாயிகள் கூறியதாவது: கர்நாடகா அரசிடம் இருந்து, நடுவர் மன்ற தீர்ப்பின் அடிப்படையில், மாதந்தோறும் தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை முறைப்படி தருவதற்கான உத்தரவாதத்தை, இந்த கூட்டத்தில் பெற்றுத்தர வேண்டும். காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் ஒழுங்காற்றுக் குழுவை அமைக்க, மத்திய

அரசிடம் வலியுறுத்த வேண்டும். சம்பா சாகுபடிக்கு திறக்கப்பட்டுள்ள தண்ணீர் பற்றாக்குறையாக இருப்பதால், அவசர தேவை கருதி, கர்நாடகாவிடம் இருந்து, 30 டி.எம்.சி., தண்ணீரை பெற்றுத் தர வேண்டும். மேலும், கர்நாடகா அணைகள் நிரம்பும் போது, தமிழகத்துக்கு திறக்கப்படும் உபரி நீரை கணக்கில் கொள்ளக் கூடாது. நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு படி, தமிழகத்துக்கு தரவேண்டிய தண்ணீரை தர வேண்டும் என, கர்நாடகா அரசிடம், இந்த கூட்டத்தில் வலியுறுத்த வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

**தோட்டக்கலை கல்லூரியில் விதைகளை வாங்க ஆர்வம்**

பெரியகுளம்:பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரியில் தானியங்கி கருவியில் பத்து ரூபாய் செலுத்தி, விதை பாக்கெட்டுகளை பெறுவதற்கு விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பெரியகுளம் தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், தானியங்கி விதை வழங்கும் கருவி அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்ட காய்கறி மற்றும் மலர் பயிர்களின் விதைகளை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தானியங்கியில் பெறுகின்றனர். தக்காளி, கத்தரி, மிளகாய், வெங்காயம், பாகல், புடலை, பீர்க்கும், பூசணி உட்பட காய்கறி விதைப்பாக்கெட்டுகள் கிடைக்கும். தானியங்கி விதை வழங்கும் கருவியில், ரூபாய் பத்து செலுத்தி, தங்களுக்கு தேவையான விதை பாக்கெட்டுகளை தேர்வு செய்து அதற்குரிய எண்களை அழுத்தி விதைகளை பெறலாம்.

தானியங்கி கருவி குளிரூட்டப்பட்ட வசதியுள்ளதால் விதைகள் நீண்ட நாட்களுக்கு பாதுகாப்பாக இருக்கும். வீட்டுத்தோட்டம், மாடித்தோட்டம் அமைப்பதற்கு பொதுமக்களும், பண்ணைக்கு விவசாயிகளுக்கும் அதிகளவில் விதை பாக்கெட்டுகளை வாங்கி செல்கின்றனர்.

**பசுமை வீடுகளுக்கு சோலார் விளக்கு**

தேவதானப்பட்டி:தேனி மாவட்டத்தில் 2012-2013 ம் ஆண்டு கட்டப்பட்ட பசுமை வீடுகளுக்கு சோலார் விளக்கு பொருத்தும் பணி நடந்து வருகிறது.

வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு அரசு பசுமை வீடு கட்டும் திட்டம் மூலம் வீடுகள் கட்டப்பட்டன. பயனாளிகளை ஊராட்சிகள் தேர்வு செய்தன. இத்திட்டம் துவங்கிய போது ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. இத் தொகையில் 30 ஆயிரம் ரூபாய் சோலார் விளக்கு பொருத்துவதற்கு பிடித்தம் செய்யப்பட்டது. தற்போது இத்திட்ட வீடுகளுக்கு 2 லட்சத்து பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. வீடு கட்டும் போது சோலார் விளக்கு பொருத்துவதற்கு தேவையான வகையில் ஒயரிங் வேலைகள் செய்யப்பட்டுள்ளன.தேனி மாவட்டத்தில் பசுமை வீடு கட்டியவர்களுக்கு சோலார் விளக்கு பொருத்தப்படாமல் இருந்தது. இந்நிலையில் தேனி மாவட்டத்தில் 2012-2013 ம் ஆண்டு பயன்பெற்ற பசுமைவீடுகளுக்கு சோலார் விளக்கு பொருத்தும் பணி நடந்து வருகிறது.

**தேவாரம் பகுதியில் எள் விதைப்பு மும்முரம்**

தேவாரம்:தொடர் மழை எதிரொலியாக சாலைமலை அடிவாரத்தில் மானாவாரி எள் விதைக்கும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

தேவாரம் சாலைமலை அடிவாரத்தில் 3 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி விவசாயம் நடக்கிறது. ஆண்டுக்கு இருமுறை மானாவாரி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபடுவார்கள். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்ததால் மானாவாரி விதைப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. தற்போது தொடர் மழை பெய்து வருவதால், எள் சாகுபடியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

மார்க்கையன்கோட்டை விவசாயி சுரேஷ் கூறுகையில், "சாலைமலை பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்கிறது. அடுத்த

மாதமும் மழை பெய்யும் வாய்ப்புள்ளதால், குறுகிய கால பயிரான எள் மானாவாரியாக பயிரிடப்படுகிறது. ஒரு குழிக்கு(60 செண்ட்) ரூ.20 ஆயிரம் செலவாகும். எள்ளுக்கு நல்ல விலை கிடைப்பதால் கூடுதல் மகசூல் கிடைக்கும் பட்சத்தில் செலவு போக ரூ.50 ஆயிரம் கிடைக்க வாய்ப்புள்ளது,' என்றார்.

**கேரள வனத்தில் அபூர்வ வண்ணத்துப்பூச்சிகள்**

மூணாறு:கேரளா வனம் மற்றும் வன உயிரினத் துறை சார்பில் நடைபெற்ற கணக்கெடுப்பில், பல்வேறு அபூர்வ வகை வண்ணத்துப்பூச்சிகள் இனம் காணப்பட்டன.

கேரளா வனம் மற்றும் வன உயிரினத் துறை சார்பில், வண்ணத்துப்பூச்சிகளின் அனைத்து தகவல்களையும் உட்படுத்தி, "வண்ணத்துப் பூச்சி காலண்டர்' தயாரிக்கப்படுகிறது. இதன் முன்னோடியாக வண்ணத்துப் பூச்சி கணக்கெடுப்பு நடந்தது. மூணாறு பகுதியில் உள்ள பாம்பாடும் சோலை, மதிகெட்டான் சோலை, ஆனைமுடி சோலை போன்ற தேசிய பூங்காக் களிலும், குறிஞ்சி மலை சரணாலயம், சின்னார் வன உயிரின சரணாலயம் போன்றவற்றிலும் கடந்த செப்., 24ல் கணக்கெடுப்பு தொடங்கி மூன்று நாட்கள் நடந்தது.

வண்ணத்துப்பூச்சிகளைக் குறித்து நன்கு அறிந்த கேரளா, தமிழகம், கர்நாடகா போன்ற மாநிலங்களை சேர்ந்த வல்லுனர்கள் மற்றும் வனத்துறையினர் என 110 பேர் பங்கேற்றனர். இவர்கள் 12 குழுக்களாக பிரிந்து கணக்கெடுப்பு நடத்தினர்.இதில் அபூர்வமாக தென்படும் எவர்ஸ்கெட்ஸ்ஏஸ், பழநி புஷ் பிரவுண், பழநி பிரீத்லரி, நீலகிரி கிளைடட் எல்லோ,ரெட் டிஸ்க் புஷ் பிரவுண், எல்லோ ஸ்டிரைபேட்ஹெட்ஜ் போன்ற வகைகளைச் சார்ந்த வண்ணத்துப் பூச்சிகளை பல்வேறு இடங்களில் கண்டனர். சின்னார் வன உயிரின

சரணாலயத்தில் ஏற்கனவே கண்டறியப்பட்ட 108 வகையுடன், தற்போது புதிதாக 14 வகை வண்ணத்துப்பூச்சிகள் இனம் காணப்பட்டன.

இங்கு 122 வகை வண்ணத்துப்பூச்சிகள் உள்ளதாக தெரியவந்துள்ளது.தவிர பாம்பாடும் சோலை தேசிய பூங்காவில் 88, ஆனைமுடி சோலை தேசிய பூங்காவில் 94, மதிக்கெட்டான் சோலை தேசிய பூங்காவில் 144, குறிஞ்சி சரணாலயத்தில் 50 வகை வண்ணத்துப்பூச்சிகள் உள்ளதாக கணக்கிடப் பட்டுள்ளது.

தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

**ஆரோக்கியம்.. ஆயுள்.. 7 வழி**



1. சத்துப்பட்டியலை படியுங்கள்...

சிறிய கடையோ, பெரிய கடையோ, விலை மலிவோ, தள்ளுபடி விற்பனையோ! எதுவானாலும் ஆரோக்கியம் தேடுபவர்கள் முதலில் கவனிக்க வேண்டியது சத்துப்பட்டியலைத்தான். என்னென்ன சேர்த்து அந்த உணவு தயாரிக்கப்பட்டுள்ளது? என்னென்ன சத்துகள் அடங்கியுள்ளன? என்பதை குறிப்பிடாத பொருட்களை வாங்கிப் பயன்படுத்துவதை தவிர்த்துவிடுங்கள். மருத்துவரின் ஆலோசனைப்படி உங்களுக்கு என்னென்ன சத்துகள், தாதுகள் சேர்க்கப்பட வேண்டுமோ, அவை அடங்கிய உணவுப் பொருட்களை மட்டுமே தேடிப் பிடித்து வாங்குங்கள். புரதம், கொழுப்பு, மற்றும் கார்போஹைட்ரேட்டுகளின் அளவை தெரிந்து பயன்படுத்துவது ஆரோக்கியமானது.

2. புதியதை வாங்குங்கள்:

காய்கறிகள், உணவுகள் எதுவானாலும் புதிதாக சந்தைக்கு கொண்டு வரப்பட்டவற்றை தேடிப்பிடித்து வாங்குங்கள். குறைந்தவிலையில், அதிக எடையுள்ள பொருட்களை தருகிறார்கள் என்று வாடி, வதங்கியதையோ, நொந்து, பொடிந்து, மீந்து போனதையோ வாங்காதீர்கள். குறிப்பாக மீன், கோழி மற்றும் இறைச்சி போன்றவை புதிதாக இல்லாவிட்டால் வாங்கு வதை தவிர்த்துவிடுங்கள்.

3. குளிர்பதன உணவுகள் வேண்டாம்:

புதிய உணவுகளே மிகச்சிறந்தது. ஆனால் குறிப்பிட்ட உணவுகள் சில பருவங்களில் மட்டுமே விளைவதால் அவற்றை பதப்படுத்தி விற்பனை செய்வது வியாபாரிகளின் வாடிக்கை. குளிர்பதனப் பெட்டியில் வைத்தும், பதப்படுத்தி பாக் கெட்டுகள், டப்பாக்களில் அடைத்தும் அத்தகைய பொருட்கள் விற்கப்படுகின்றன. குளிர்பதன பெட்டியில் வைத்து பாதுகாக்கப்படும் காய்கறி களைவிட, வெளியில் வைத்து புதிதாக விற்கப் படும் காய்கறிகள் சிறந்தவை. குளிர்விக்கும்போது

காய்கறிகளின் தோல் பகுதிகள் பாதிக்கப்படும். பெரும்பாலான உணவுகளில் தோல்பகுதிகளில்தான் அவசியமான சத்துப்பொருட்கள் இருக்கின்றன. எனவே குளிர்பதன பெட்டியில் வைத்திருக்கும் காய்கறியைவிட, வெளியில் வைத்திருக்கும் லேசாக வாடிய காய்கறிகளைக்கூட வாங்கி சமைத்துவிடலாம். அதே நேரத்தில் நீண்டகாலம் கெட்டுப்போகாமல் பாதுகாக்கப்படும் டப்பா உணவுகளைவிட, குளிர்பதன பெட்டியில் இருக்கும் உணவுகள் பரவாயில்லைதான்!

4. தொழில்முறை உணவுகளை தவிர்க்கலாம்:

உணவுப் பண்டங்களை பதப்படுத்தியும், உலர்த்தியும் விதவிதமான உணவுகளாக்கி வழங்குவது இன்று சிறந்த தொழிலாக இருக்கிறது. உருளைக் கிழங்கை சிப்ஸ்களாக தயாரித்து விற்பது, பாக்கெட்டில் அடைக்கப்படும் பீட்சாக் கள், நொறுக்குத் தீனிகள் போன்றவற்றை இதில் சேர்க்கலாம். நீண்டகாலம் கெட்டுப்போகாமல் இருக்க வேதிப்பொருட்கள் சேர்ப்பதுடன், முக்கியமான பல சத்துப் பொருட்கள் நீக்கப்பட்டே இவை தயாரிக்கப்படுகின்றன. மதிப்பு கூட்டப்பட்ட இந்த உணவுப் பண்டங்கள் விலை அதிகமானதாக இருந்தாலும், உடலுக்கு ஆரோக்கியம் தருவதாக இருப்பதில்லை. இவற்றை வாங்குவதை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கியம் பேணுவதுடன், கணிசமான காசையும் மிச்சம் பிடிக்கலாம்.

5. இயற்கை உணவுகளின் விலை:

இயற்கை உணவுப் பொருட்களை விற்கும் அங்காடிகள் குறைவாகவே இருக்கின்றன. அவற்றின் விலையும் யோசிக்க வைக்கும் வகையில் அதிகமாக இருக்கலாம். விலையை வைத்து மட்டும் இயற்கை உணவுகளை ஒதுக்கிவிடாதீர்கள். அதிக பூச்சிக் கொல்லிகள் சேர்க்கப்படாமல் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உணவுகளுக்கு சற்று விலை அதிகம் கொடுக்கலாம். அது ஆரோக்கியத்திற்கு நல்லதே. நாம்

இயற்கை உணவுகளை பயன்படுத்துவதை பெருக்கும்போது இவைகளின் விலை குறையத் தொடங்கிவிடும்.

6. தரமும், பழக்கமும்:

தரமான பொருட்களை வாங்கி பயன்படுத்துவதை வழக்கமாக்கிக் கொண்டால் ஆரோக்கியத்தை அன்றாடம் உணரலாம். விலை குறைந்தது என்று மீந்துபோன பொருட்களை வாங்குவதும், விலை அதிகமிருப்பதெல்லாம் சத்தானவை என்று பதப்படுத்தப்பட்ட பொருட்களை வாங்குவதும் ஆரோக்கியமானதல்ல. கவனமின்றி இறைச்சிகளை வாங்கி பயன்படுத்தினால் உடல் எடை அதிகரிப்பது, சத்து குறைவது– கொழுப்பு அதிகரிப்பது என அவதிப்பட வைக்கும். தரமான பொருட் களை பயன்படுத்தும்போது சில வாரங் களிலேயே உங்கள் உற்சாகம் பெருகுவதையும், உடல் ஆரோக்கியமாக இருப்பதையும் உணரத் தொடங்குவீர்கள்.

7. இறைச்சியை தேர்வு செய்ய...

ஆடு, மாடு, பன்றி இறைச்சிகளை வாங்கும்போது கொழுப்பு தவிர்த்து வாங்குவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில் விலங்குகளின் உடலில் சுரக்கும் ஹார்மோன் நச்சுகள், நுண்கிருமிகள் அனைத்தும் பெரும்பாலும் கொழுப்புத் திசுக்களில்தான் தஞ்சம் அடையும். விலா எலும்புகளை சுற்றிய தசைகள் மற்றும் பின்னங்கால் பெருந்தொடை இறைச்சியை தேர்வு செய்வது நல்லது.

உடனடியாக வெட்டி விற்கப்படும் இறைச்சியை வாங்கி அடுத்த சில மணி நேரங்களுக்குள் சமைத்து சாப்பிடுவது நல்லது. இரவில் வாங்கிவிட்டு, காலையில் சமைப்பதோ, பிரிட்ஜ்ஜில் வைத்திருந்ததால் கெட்டுப்போயிருக்காது என்று நினைப்பதோ தவறு.

ஆரோக்கியமான கோழி இறைச்சி சாப்பிட விரும்புபவர்கள், வீடுகளில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழி, சேவல்களை வாங்கி சமைக்கலாம்.

பண்ணைகளில் வளர்க்கப்படும் கறிக்கோழிகள், கட்டுப்படுத்தப்பட்ட சூழலில், நிறைய இறைச்சிக்காக கொழுத்த தீவனங்கள் கொடுத்து வளர்க்கப்பட்டதாக இருக்கும். போதுமான சூரியஒளி, இடவசதி, சத்துகள் கிடைக்காமல் வளரும் இவை அதிக நோய் எதிர்ப்பு சக்தியின்றி காணப்படும். மரபணு முறையிலும், ஊசி மருந்துகள் மூலமும்கூட கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இவை நடப்பதற்குக்கூட சக்தியற்றவையாக வளரும். அதை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு ஆரோக்கியமாக இருப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். கோழி இறைச்சியில் தோல்பகுதியை சாப்பிடுவதை தவிர்த்திடுங்கள். மீன்களில் பண்ணை மீன்களைவிட கடல் மீன்களும், ஏரி மீன்களும் சிறந்தவை.

வழக்கமாக உணவுப் பொருட்கள் வாங்கும் கடைக் காரர் மற்றும் இறைச்சி கடைக்காரரிடம் தனக்கு இதுபோன்ற உணவுகள்தான் வேண்டும் என்பதை கண்டிப்பாக கூறிவிடுங்கள். அவற்றை மட்டுமே பயன்படுத்துவதை உறுதிப்படுத்துங்கள். ஆரோக்கிய ஆயுள் பெறுங்கள்!

**பொள்ளாச்சி பகுதியில் இளநீர் விளைச்சல் அதிகரிப்பு**



பொள்ளாச்சி பகுதியில் இளநீர் விளைச்சல் அதிகரித்துள்ளது.

<u>தென்னை மரங்கள்</u>

பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் 25 லட்சத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. இங்கு பறிக்கப்படும் தேங்காய், இளநீர் போன்றவை திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் விவசாயிகள் உலர் களங்களில் தேங்காய்களை உடைத்து போட்டு, கொப்பரை தேங்காய்களையும் உற்பத்தி செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நல்ல மழை பெய்தது. இந்த மழையினால் தற்போது இளநீர் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இளநீர் வெளியூர்களுக்கு அனுப்புவது அதிகரித்துள்ளது.

<u>விலை வீழ்ச்சி</u>

இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:–

பொள்ளாச்சி பகுதியில் பச்சை நிற இளநீர், செந்நிற இளநீர் ஆகிய 2 வகை இளநீர்களும் விளைவிக்கப்படுகிறது. இங்கு விளையும் இளநீருக்கு ஆந்திர மாநிலத்தில் அதிக கிராக்கி உள்ளது. இதனால் இங்கிருந்து அதிகளவில் இளநீர் ஆந்திராவுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த

மாதம் ஒரு பச்சை நிற இளநீர் ரூ.17–க்கும், ஒரு செந்நிற இளநீர் ரூ.19–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில் ஆந்திராவில் கடும் வெப்பம் நிலவுவதால் அங்கு இளநீர் தேவை அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் இங்கு இளநீர் விளைச்சல் அதிகமாகி உள்ளது. இதனால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த மாதத்தை விட ஒரு இளநீருக்கு ரூ.2 குறைந்து உள்ளது. இதன்படி பச்சை நிற இளநீர் ரூ.15–க்கும், செந்நிற இளநீர் ரூ.17–க்கும் விற்பனையாகிறது.

<u>கவலை</u>

தற்போது வாரத்துக்கு 3 லட்சம் முதல் 5 லட்சம் வரை இளநீர் ஆந்திராவுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்த விலை வீழ்ச்சி எங்களை போன்ற விவசாயிகள் மத்தியில் கவலை அடைய செய்துள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**பொள்ளாச்சியில் வெற்றிலை விலை அதிகரிப்பு**



பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய கிழமைகளில் வெற்றிலை ஏலம் நடந்து வருகிறது. இங்கு பொள்ளாச்சி சுற்றுப்புற பகுதிகளில் இருந்தும், கரூர் பகுதியில் இருந்து வெற்றிலை விற்பனைக்கு வருகிறது. நேற்று சனிக்கிழமை என்பதால் வெற்றிலை ஏலம் நடந்தது. தலா 10 கிலோ எடை கொண்ட கட்டுகள் 100–க்கும் அதிகமான கட்டுகள் வந்தன. இதில் 10 கிலோ கொண்ட ஒரு கட்டு வெற்றிலை ரூ.2 ஆயிரத்து 600 வரை விற்பனையானது.

இது குறித்து வியாபாரி ஒருவர் கூறுகையில், கடந்த வாரத்தை விட தற்போது வரத்து குறைவாக இருந்தது. இதனால் கடந்த வாரம் ரூ.1500–

க்கு விற்பனையான 10 கிலோகொண்ட கட்டு நேற்று ரூ.2 ஆயிரத்து 600 வரை விற்பனையானது என்று கூறினார்.

**திருப்பூர் சாய கழிவு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் விவசாயிகள் நலச்சங்க பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம்**



திருப்பூர் சாய கழிவு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று விவசாயிகள் நலச்சங்க பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொதுக்குழு கூட்டம்

நொய்யல் அருகே குறுக்குச்சாலையில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் கரூர் மாவட்ட நொய்யல் பாசன விவசாயிகள் நலச்சங்க பொதுக்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு சங்க தலைவர் நொய்யல் ராமசாமி தலைமை தாங்கினார். சங்க பொதுக்குழு நிர்வாகிகள் அர்ச்சுணன், சுப்பிரமணி, லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாயி பெரியசாமி வரவேற்றார். கூட்டத்தில், கடந்த 1990-ம் ஆண்டு முதல் 25 ஆண்டுகளாக திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களை சேர்ந்த 70

ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் நொய்யல் ஆற்றில் வரும் சாயக்கழிவு நீரால் பாதிக்கப்படுகின்றன. இழப்பீட்டு ஆணை

இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு ரூ.75 கோடி நஷ்டஈடு வழங்க தீர்ப்பு வழங்கியும் இன்னும் விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்கவில்லை. இதனால் வரும் சட்டமன்ற தேர்தலில் அரசியல் வாதிகளுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று சங்க கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து கூட்டத்தில், நொய்யல் ஆற்றில் திருப்பூர் சாயக்கழிவு நீர் கலக்காமல் தடுத்து நல்ல தண்ணீரை அணையில் தேக்கி பாசன வாய்க்கால் மற்றும் மதகு களை சரிசெய்து பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும். இழப்பீடு ஆணையத்தை கலைக்க முயற்சிப்பதை கைவிட்டுவிட்டு இழப்பீட்டு ஆணையத்திற்கு தலைவரை மத்திய அரசு நியமிக்க வேண்டும். தீர்வு காண வேண்டும்

தமிழக அரசு அரசாணைபிறப்பித்து திருப்பூர் சாய கழிவு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும். மேலும், வருகிற சட்டமன்ற தேர்தலில் இப்பிரச்சினையை முன்னிறுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த கூட்டத்தில் சங்க நிர்வாகிகள் சின்னுசாமி, கதிர்வேல், முன்னூர் துரைசாமி உள்பட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் உங்காம்பாளையம் விவசாயி ராமசாமி நன்றி கூறினார்.

**கரூர் மாவட்டம் பட்டுப்புழு வளர்ப்பில் சிறந்து விளங்குகிறது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் கலெக்டர் ஜெயந்தி பேட்டி**



கரூர் மாவட்டம் பட்டுப்புழு வளர்ப்பில் சிறந்து விளங்குகிறது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கலெக்டர் ஜெயந்தி கூறினார்.

பேட்டி

கரூர் மாவட்டம் மண்மங்கலம் பகுதியில் செயல்பட்டு வரும் பட்டுப்புழு வளர்ப்பு மையத்தை கலெக்டர் ஜெயந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து மல்பரி கன்றுகள் வளர்த்தல், தொழில்நுட்பத்துடன் பட்டுப்புழு வளர்த்தல் ஆகிய மையங்களை நேரில் பார்வையிட்டார். அதன் பிறகு அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கரூர் மாவட்ட விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பை ஒரு சிறந்த வேளாண் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். முதல்-அமைச்சர் ஜெயலலிதா பட்டுப்புழு வளர்ப்பு திட்டத்தை ஊக்கப்படுத்தும் விதமாக

மானியத்திட்டம் வழங்க உத்தரவிட்டு வழங்கப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் தற்போது 201 ஏக்கர் பரப்பளவில் 113 விவசாயிகள் மல்பரி பயிரிட்டு உள்ளனர். இத்திட்டத்திற்காக ஒரு ஏக்கர் நடவு செய்ய ரூ.10 ஆயிரத்து 500 மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

உருவாக்க வேண்டும் . மேலும் பட்டுப்புழு வளர்ப்புக்கு 1,500-ல் இருந்து 2,000 சதுர அடி வரை ஷெட் அமைக்க ரூ.82,500-ம், 750 சதுர அடி ஷெட் அமைக்க ரூ.63 ஆயிரமும் அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகளுக்கு தேவையான மல்பரி நாற்றுகள் கரூர் தொழில்நுட்ப சேவை மையத்தின் களப்பணியாளர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் நடவும் மேற்கொள்ளப்பட்டு ஆலோசனையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டம் பட்டுப்புழு வளர்ப்பில் சிறந்து விளங்குகிறது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். இந்த ஆய்வில் மாவட்ட பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் வடிவேல் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.15 ஆயிரம் சம்பளம் வழங்க வேண்டும் பா.ம.க. செயற்குழுகூட்டத்தில் தீர்மானம்**




பந்தலூர்,

தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.15 ஆயிரம் சம்பளம் வழங்க வேண்டும் என்று பா.ம.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>செயற்குழு கூட்டம்</u>

பந்தலூர் தாலுகா சேரம்பாடியில் பா.ம.க. செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு ஒன்றிய செயலாளர் அப்துரபிக் தலைமை தாங்கினார். இதில், மாநில பொதுக்குழு உறுப்பினர் தியாகராஜ், மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் கோவிந்தராஜ், மாவட்ட துணை செயலாளர் முருகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பச்சை தேயிலை கிலோவுக்கு ரூ.30 வழங்க வேண்டும். சிறு விவசாயிகளுக்கு பட்டா வழங்க வேண்டும். நிலம் வாங்க– விற்க உள்ள தடையை நீக்க வேண்டும். காட்டு யானைகள் ஊருக்குள் நுழைவதை தடுக்க வனத்துறையினர் முறையாக அகழி அமைக்க வேண்டும்.

<u>மின்வேலி அமைக்க வேண்டும்</u>

வனவிலங்குகள் தாக்கி இறப்போரின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். அரசு தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.15 ஆயிரம் சம்பளம் வழங்க வேண்டும். டேன்டீ தொழிலாளர்களின் குழந்தைகள் பள்ளி செல்ல டேன்டீ சார்பில் பஸ் வசதி ஏற்படுத்திதர வேண்டும். டேன்டீ தேயிலை தோட்டத்தை சுற்றிலும் மின் வேலி அமைக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாநில துணை பொதுச்செயலாளர் ஜான்லியோ, மாவட்ட செயலாளர் திருச்செல்வம், மாவட்ட தலைவர் நாகராஜ், கொள்கை விளக்க அணி செயலாளர் மகேந்திரன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் செயற்குழு உறுப்பினர் மாணிக்கம் நன்றி கூறினார்.

**தண்ணீர் கொண்டுவர ஓடையை விவசாயிகள் தூர்வாரினர்**



கன்னங்குறிச்சி புது ஏரியை பொக்லைன் எந்திரம் கொண்டு தூர்வாரிய போது எடுத்த படம்.

கன்னங்குறிச்சி புது ஏரிக்கு தண்ணீர் கொண்டுவர ஓடையை விவசாயிகள் தூர்வாரினர். புது ஏரி

சேலத்தில் கன்னங்குறிச்சி புது ஏரி முக்கியமான ஏரிகளில் ஒன்றாகும். ஏற்காட்டில் இருந்து வரும் தண்ணீர் முதலில் புதுஏரிக்கு வந்த பின்னர்தான் மற்ற ஏரிக்கு செல்லும். எனவே புதுஏரி அனைத்து ஏரிகளுக்கும் தாய்ஏரி என்று அழைக்கப்படுகிறது. இதன் உபரிநீர் மூக்கனேரி, மருவபாஞ்சான் ஆகிய ஏரிகள் வழியாக திருமணி முத்தாறு செல்கிறது.

இந்த ஏரி ஒரே ஆண்டில் 3 முறை நிரம்பியதாக வரலாறு உள்ளது. ஆனால் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்த காரணத்தினால் ஏரி நிரம்பவில்லை. இதனால் கன்னங்குறிச்சி அதனை சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயம் செய்யப்படாமல் நிலங்கள் அனைத்தும் தரிசாக காணப்பட்டது. தூர் வாரினர்

இந்த ஆண்டில் போதிய அளவு மழைபெய்தும் ஏரிக்கு தண்ணீர் வரவில்லை. இந்த ஆண்டும் ஏரி நிரம்பவில்லை என்றால் கடும் வறட்சி

ஏற்பட்டுவிடும் என்பதால் கன்னங்குறிச்சி, ஏரிகாடு, மன்னார்பாளையம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் சின்னப்பையன், அய்யனார். சந்திரகவுண்டர் ஆகியோர் தலைமையில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஏற்காடு அடிவாரம் கோம்பை முதல் புதுஏரிவரையுள்ள ஓடையை பொக்லைன் எந்திரம் உதவியுடன் தூர்வாரி தூய்மைப்படுத்தியதுடன் ஆக்கிரமிப்புகளையும் அகற்றினர். இதனால் மழைநீர் தங்குதடையின்றி புதுஏரிக்கு வர வழிவகை செய்துள்ளதினால் ஏரி வெகுவிரைவில் நிரம்பும் என விவசாயிகள் கூறினார்கள்.

**கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் வாழைப்பழங்கள்**



உத்தமபாளையம்

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் இருந்து அதிக அளவில் வாழைப்பழங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

<u>வரவேற்பு உள்ளது</u>

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முல்லைப்பெரியாறு பாசனம் மூலம் இருபோக நெல் விவசாயம் நடைபெறுகிறது. அத்துடன் மறைமுக பாசனம் மூலம் திராட்சை, தென்னை, வாழை ஆகியவையும் அதிக அளவில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

கம்பம் பள்ளதாக்கு பகுதிகளான காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, ராயப்பன்பட்டி, அனுமந்தன்பட்டி, க,புதுப்பட்டி, ஆனைமலையன்பட்டி, கோகிலாபுரம் உள்ளிட்ட ஊர்களில் வாழை விவசாயத்திற்கு ஏற்ற மண் உள்ளது. இதனால் அந்த பகுதிகளில் வாழை தோட்டங்கள் அதிக

அளவில் உள்ளன. இங்கு விளையும் வாழை தார்கள் சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட பெருநகரங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கம்பம் பள்ளத்தாக்கு பகுதி வாழை தார்களுக்கு சந்தையில் தனி வரவேற்பு உள்ளது. இதனால் வியாபாரிகள் ஆர்வத்துடன் இங்கிருந்து அவற்றை வாங்கி செல்கின்றனர். காட்டு பன்றிகள்

இந்த பகுதிகளில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக வாழைப்பழங்களை பிரித்தெடுத்து தண்ணீரில் நனைத்து பெட்டிகளில் அடுக்குகிறார்கள். பின்னர் இந்த பெட்டிகள் குளிர்சாதன லாரிகள் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பின்னர் அங்கிருந்து அவை சிங்கப்பூர், மலேசியா, இலங்கை உள்பட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதுகுறித்து அப்பகுதி விவசாயிகள் கூறியதாவது:–

வாழை விவசாயத்தில் மகசூல் எடுக்க குறைந்தது 8 மாதங்கள் ஆகும். வாழைத்தார்களை வெட்டியதுடன், அந்த மரங்களும் வெட்டப்படும். பின்னர் அதன் அருகே உள்ள பக்க கன்றுகள் வளர்ச்சி அடைந்து பலன் தரும். ஆனால் வாழைத்தார்களை அறுவடை செய்யும் முன்பாக தோட்டங்களுக்குள் காட்டுபன்றிகள் அடிக்கடி புகுந்து நாசம் செய்து விடுகின்றன. இதனை தடுக்க வனத்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தொடர் மழை எதிரொலி; மானாவாரி விவசாய பணிகள் தொடக்கம்**



ஆண்டிப்பட்டி

ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் மானாவாரி விவசாய பணிகள் தொடங்கியுள்ளது.

<u>மானாவாரி விவசாயம்</u>

தேனி மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக போதுமான மழை இல்லாத காரணத்தால் விவசாய பணிகள் அடியோடு பாதிக்கப்பட்டது. ஆற்றங்கரையை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் மட்டுமே விவசாயம் நடைபெற்று வந்தது. இந்த ஆண்டு கோடையில் ஆண்டிப்பட்டி பகுதிகளில் ஓரளவு மழை பெய்த நிலையில் மானாவாரி விவசாயம் நடைபெற்றது.

ஆனால் தென்மேற்கு பருவமழை போதுமான அளவு பெய்யாத நிலையில் மானாவாரி பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகளும் பாதிக்கப்பட்டனர். இதற்கிடையே கடந்த 2 மாதங்களாக மழை இல்லாமல் வெயிலின் தாக்கம் அதிகரித்த காரணத்தால் மானாவாரி பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகளும் அவற்றை காப்பாற்ற முடியாமல் தவித்து வந்தனர்.

<u>பலத்த மழை</u>

இந்நிலையில் ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் மானாவாரி பயிர்களை சாகுபடி செய்யும் பணிகளை விவசாயிகள் மீண்டும் தொடங்கி

உள்ளனர். விரைவில் வடகிழக்கு பருவமழை பெய்யும் என்பதால் மானாவாரி விவசாயிகள் தங்களின் நிலத்தை உழுது, கம்பு, சோளம், மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்துள்ளனர்.

இதற்கிடையே கடந்த சில மாதங்களாக தரிசாக கிடந்த நிலத்தையும் தற்போது உழவு செய்து வருகின்றனர். இதேபோல ஆற்றுபாசனப்பகுதிகளிலும் காய்கறி சாகுபடி தொடங்கப்பட்டு உள்ளது.

**தேனி மாவட்டத்தில் பரவலாக மழை: வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



ஆண்டிப்பட்டி,

தேனி மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக பரவலாக மழை பெய்தது. இதனால் வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில், அதன் நீர்மட்டம் ஒரேநாளில் 2 அடி உயர்ந்தது.

நீர்மட்டம்

தேனி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு போதுமான அளவு பெய்யவில்லை. இதனால் முல்லைப்பெரியாறு மற்றும் வைகை அணைகளுக்கு போதிய அளவு நீர்வரத்து இல்லை. குறிப்பாக வைகை அணைக்கு நீர்வரத்து என்பது முழுமையாக இல்லாமல் போனது.

முல்லைப்பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் மட்டுமே வைகை அணைக்கு முக்கிய நீர்ஆதாரமாக இருந்து வருகிறது. இதற்கிடையே வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக கடந்த மாதம் முதல் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென சரிந்தது.

முறைப்பாசனம்

கடந்த மாதம் 52 அடியாக இருந்த வைகை அணையின் நீர்மட்டம் தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் கடந்த வாரம் 40 அடியாக குறைந்தது. இதனால் வைகை அணை பாசனப்பகுதிகளில் முறைப்பாசனம் அமல்படுத்தப்பட்டு, வைகை அணையில் இருந்து குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தேனி மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக பரவலாக இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. இதன்காரணமாக வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக வைகை அணைக்கு சராசரியாக வினாடிக்கு 500 கனஅடிக்குள் மட்டுமே நீர்வரத்து காணப்பட்டது.

2 அடி உயர்ந்துள்ளது

ஆனால் நேற்றுக்காலை 6 மணி அளவில் அணைக்கான நீர்வரத்து வினாடிக்கு 1,763 அடியாக உயர்ந்தது. திடீர் நீர்வரத்தால் நேற்று முன்தினம் 40.68 அடியாக இருந்த வைகை அணையின் நீர்மட்டம் நேற்றுக்காலை 6 மணிக்கு 42.36 அடியாகவும், காலை 10 மணிக்கு 42.70 அடியாகவும் உயர்ந்தது.

இதன்படி வைகை அணை நீர்மட்டம் ஒரேநாளில் 2 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தேனி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் வைகை அணை நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்பு உருவாகியுள்ளது. தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழையின் அளவு மில்லி மீட்டரில் பின்வருமாறு:–

தேக்கடி–8.2, தேனி மற்றும் அரண்மனைப்புதூர்–35.2, பெரியகுளம்–37, போடி–1.8, வீரபாண்டி–32, கூடலூர்–45, சண்முகாநதி–6, பாளையம்–23.8, மஞ்சளாறு மற்றும் சோத்துப்பாறை–10, ஆண்டிப்பட்டி–4.6, வைகை அணை–12.8, வெள்ளிமலை–16.

**திருப்பூரில் பலத்த மழை**



திருப்பூர் மாவட்டம் முழுவதும் கடந்த ஒரு வாரமாக இரவு நேரத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. ஆனால் வழக்கம்போல் பகல் நேரத்தில் வெயில் சுட்டெரித்தது. நேற்று காலையிலும் சூரியன் வழக்கம் போல் தனது உக்கிரத்தை காட்டியது.

இந்த நிலையில் நேற்று மாலை 2 மணிக்கு லேசான சாரல் மழை பெய்தது. அதன்பின்னர் பலத்த மழை பொழிய தொடங்கியது. சுமார் 1½ மணி நேரம் நீடித்த இந்த மழையால் திருப்பூர் மாநகர முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வாகனங்கள் மிகவும் சிரமத்துடன் ரோட்டில் ஊர்ந்து சென்றன. இந்த மழையால் சாலையோர வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

பெரும்பாலான பகுதிகளில் சாக்கடைக்கால்வாய்கள் குப்பைகளால் அடைத்து கிடந்தன. இவற்றில் மழைநீர் நிரம்பி சென்றதால் குப்பைகள் அனைத்தும்

**வெள்ளகோவில் வாரச்சந்தைக்கு முருங்கைக்காய் வரத்து குறைவு; கிலோ ரூ.18–க்கு விற்பனை**


வெள்ளகோவில்

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவிலில் வாரந்தோறும் கூடும் ஞாயிற்றுக்கிழமை வாரச்சந்தைக்கு சுற்றுப்புற விவசாயிகள், தங்கள் தோட்டங்களில் விளைவித்த முருங்கைகாய்களை கொண்டு வந்து விற்பனை செய்வார்கள். கடந்த 10 வாரங்களுக்கு முன்பு 1 கிலோ முருங்கைக்காய் ரூ.30 வரை விற்பனை ஆனது. கடந்த வாரம் ஒரு கிலோ செடி முருங்கைக்காய் ரூ.12–க்கும், மர முருங்கைக்காய் 1 கிலோ ரூ.10–க்கும் விற்பனை ஆனது.

நேற்று நடைபெற்ற சந்தையில் 1 கிலோ செடி முருங்கைக்காய் ரூ.18–க்கும், மரமுருங்கைக்காய் ரூ.12–க்கும் விற்பனை ஆனது. இப்பகுதியில் மழை இல்லாததால் நேற்று ஞாயிற்றுக்கிழமை 10 டன் முருங்கைக்காய் விற்பனைக்கு வந்து இருந்தது. மழைபெய்து விட்டால் பூக்கள் உதிர்ந்து காய்கள் அதிகமாக பிடிக்கவில்லை. வரும் வாரங்களில் ஒரு கிலோ ரூ.25 வரை விற்பனை ஆகலாம் என வியாபாரிகள் தெரிவித்தனர். வெள்ளகோவில் சந்தையில் நேற்று சின்ன வெங்காயம் 1 கிலோ ரூ.25–க்கும், பெரிய வெங்காயம் 1 கிலோ ரூ.35–க்கும் விற்பனை ஆனது.

தினகரன்

**விளைச்சல் குறைவு, தேவை அதிகரிப்பால் பருப்பு விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்தது**



சென்னை: விளைச்சல் குறைவு, தேவை அதிகரிப்பால் பருப்பு விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்து வருகிறது. தீபாவளி உள்ளிட்ட பண்டிகை நாட்கள் நெருங்கும் நேரத்தில் விலை உயர்வு நடுத்தர மக்களை நிலை குலைய வைத்துள்ளது. மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இரு ந்து தமிழகத்திற்கு பருப்பு வருகிறது. இங்கு போதிய விளைச்சல் இல்லாததால் வரத்து வெகுவாக குறைந்துள்ளது. அது மட்டுமல்லாமல் தேவை அதிகரிப்பு போன்ற காரணங்களால் பருப்பு விலை வரலாறு காணாத வகையில் உயர தொடங்கியுள்ளது. உளுத்தம் பருப்பு சில்லரையில் 1 கிலோ ரூ.125லிருந்து ரூ.140 ஆக உயர்ந்துள்ளது. உளுத்தம்பருப்பு (பாக்கெட்) ரூ.130லிருந்து ரூ.150, துவரம் பருப்பு சில்லரையில் ரூ.150, பாக்கெட் துவரம்பருப்பு ரூ.160க்கும் விற்கப்படுகிறது. கென்யா, தான்சானியா போன்ற ஆப்ரிக்க நாடுகளில் இருந்து இறக்குமதி குறைவால் தான்சானியா துவரம்பருப்பு ரூ.100லிருந்து ரூ ரூ.120 ஆகவும், பர்மா உளுத்தம் பருப்பு ரூ.110லிருந்து ரூ.130 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

மேலும் பாசிப்பருப்பு ரூ.105லிருந்து ரூ.115, பாசிப்பருப்பு (2ம் ரகம்) ₹ 95லிருந்து ரூ.105, கடலைப்பருப்பு ரூ.65லிருந்து ரூ.70, கடலைப்பருப்பு(2ம் ரகம்) ₹ 60லிருந்து ரூ.65 ஆகவும் விலை அதிகரித்துள்ளது. ஆந்திராவின் கடப்பா, குண்டூர், நெல்லூர் போன்ற பகுதிகளில் இருந்து நீட்டு மிளகாய் வருகிறது. இங்கு விளைச்சல் குறைவால் நீட்டு மிளகாய் ரூ.120லிருந்து ரூ.160 ஆக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் பரமக்குடி, விளாத்திக்குளம், ராமநாதபுரம் போன்ற பகுதிகளில் இருந்து குண்டு மிளகாய் வருகிறது. இங்கு விளைச்சல் அதிகரிப்பு மற்றும் இருப்பு அதிகமாக உள்ளது. ஆனால், நீட்டு மிளகாய் விலை உயர்வை காரணம் காட்டி குண்டு மிளகாய் செயற்கையாக விலை உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது, ரூ.110லிருந்து ரூ.140 ஆக விலை அதிகரித்துள்ளது. இந்தியாவில் 75 சதவீதம் பாமாயில் இந்தோனேசியா, மலேசியா, பர்மா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. மத்திய அரசு இறக்குமதி வரியை ரூ.5 சதவீதம் உயர்த்தியுள்ளது. இதனால் பாமாயில் விலை அதிகரித்துள்ளது. 1 லிட்டர் பாமாயில் ரூ.46லிருந்து ரூ.52, சன்பிளவர் ஆயில் ரூ.80லிருந்து ரூ.85, சன்பிளவர் ஆயில்(2ம் ரகம்) ரூ.75லிருந்து ரூ.80 விலை உயர்ந்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறியுள்ளார்.

பூண்டு விலை குறையும் குஜராத், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் இருந்து டிசம்பர் மாதத்தில் இருந்து புதிய பூண்டு வரத் தொடங்கும். அதன் பின்னர் பூண்டு விலை ரூ.30 முதல் ரூ.50 வரை குறைய வாய்ப்புள்ளது. மேலும், ஆன்லைன் வர்த்தகமும் பருப்பு விலை உயர்வுக்கு காரணம். ஆன் லைன் வர்த்தகத்தை தடை செய்தால் பருப்பு விலை குறைய வாய்ப்புள்ளது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெய் விலை உயர்ந்தாலும், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அக்மார்க் நல்லெண்ணெய் ரூ.210லிருந்து ரூ.185, காங்கேயம், ஈரோடு, பொள்ளாச்சி நல்லெண்ணெய் ரூ.180லிருந்து ரூ.150, விளக்கேற்றும் நல்லெண்ணெய் ரூ.100லிருந்து ரூ.75, தேங்காய் எண்ணெய் ரூ.190லிருந்து ரூ.165, தேங்காய் எண்ணெய்

(2ம் ரகம்) ரூ.170லிருந்து ரூ.140, வனஸ்பதி ₹ 90லிருந்து ₹ 80, கடலை எண்ணெய் ரூ.115லிருந்து ரூ.108 விலை குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**பீர்க்கங்காய் மறைந்திருக்கும் மருத்துவ குணங்கள்**




ஆந்திராவில் பீர்க்கங்காயில் செய்கிற காரசார துவையல், கேரளாவில் பருப்பும் பீர்க்கங்காயும் சேர்த்துச் செய்கிற கூட்டு, கர்நாடகாவில் பீர்க்கங்காய் பஜ்ஜி, மகாராஷ்டிராவில் வறுத்துப் பொடித்த வேர்க்கடலை சேர்த்துச் செய்கிற பீர்க்கங்காய் ஃப்ரை... இப்படி இந்தியா முழுக்க பிரபலம் பீர்க்கங்காய். **இது மட்டுமா?**

வியட்நாமில் பீர்க்கங்காயை சூப்பில் சேர்த்துக் குடிக்கிறார்கள். சீனா, இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்சில் அன்றாட சமையலில் அவசியம் இடம்பெறுகிற காய் இது. கனடாவும் ஸ்பெயினும்கூட பீர்க்கங்காயின் பெருமையை பேசுகின்றன. இப்படி உலகம் முழுக்க வலம் வருகிற புகழ் பீர்க்கங்காய்க்கு மட்டுமே உண்டு. அத்தனைக்கும் காரணம் பீர்க்கங்காயில் மறைந்திருக்கிற மருத்துவ குணங்கள்' என்கிறார் ஊட்டச்சத்து நிபுணர் புவனேஸ்வரி. பீர்க்கங்காயின் பயன்களைப் பட்டியலிடுவதுடன், அதை வைத்து சமைக்கக்கூடிய ஆரோக்கிய

ரெசிபியை பகிர்கிறார் அவர். பீர்க்கங்காயின் பெருமைகளைப் பற்றிப் பேச பக்கங்கள் போதாது. நார்ச்சத்து மிகுந்த இந்தக் காய், குறைந்த கலோரிகளை கொண்டது. ஆரோக்கியத்துக்கு அவசியமான அத்தனை உயிர்ச்சத்துகளையும் உள்ளடக்கிய காய் இது. வைட்டமின் சி, துத்தநாகம், இரும்பு, ரிபோஃப்ளோ வின், மெக்னீசியம், தயாமின் உள்ளிட்ட அனைத்துச் சத்துகளும் இதில் உள்ளன. செல்லுலோஸ் மற்றும் நீர்ச்சத்து மிகுந்த காய் என்பதால் மலச்சிக்கலுக்கும், மூல நோய்க்கும் மாமருந்தாக உதவுகிறது. பீர்க்கங்காயில் உள்ள பெப்டைட் மற்றும் ஆல்கலாயிட் என்கிற இரண்டும் இயற்கையான இன்சுலினாக செயல்படுவதால், ரத்தம் மற்றும் சிறுநீரில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துகிறது. பீர்க்கங்காயில் உள்ள அதிகளவிலான பீட்டாகரோட்டின், பார்வைக் கோளாறுகள் வராமலும், பார்வைத் திறன் சிறக்கவும் உதவுகிறது.ரத்தத்தை சுத்திகரிப்பதிலும் பீர்க்கங்காயின் பங்கு மகத்தானது. கல்லீரல் ஆரோக்கியம் காப்பதிலும், குடிப்பழக்கத்தால் பாதிக்கப்பட்ட கல்லீரலைத் தேற்றுவதிலும் கூட பீர்க்கங்காய் பயன்படுகிறதாம்.

மஞ்சள் காமாலை நோய்க்கு பீர்க்கங்காய் சாறு மருந்தாகப் பரிந்துரைக்கப்படுகிறது. தொற்றுக் கிருமிகள் தாக்காமல் உடலைக் காத்து, நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது.தொடர்ந்து பீர்க்கங்காய் சாப்பிடுகிறவர்களின் சருமம் பருக்களோ, மருக்களோ இல்லாமல் தெளிவாகிறது. சரும நோய்கள் இருப்பவர்களுக்கு ரத்தத்தை சுத்தப்படுத்தி, நோயைக் கட்டுப்படுத்துகிறது. வயிற்றில் அமிலச் சுரப்பு அதிகமாவதைத் தடுத்து, புண்கள் வராமலும் காக்கும்.

ஒட்டுமொத்த உடலையுமே குளிர்ச்சியாக வைத்திருக்கக் கூடியது. சிறுநீர் கழிக்கும் போது உருவாகும் எரிச்சலைக் கட்டுப்படுத்தக்கூடியது.எடை குறைக்க முயற்சி செய்கிறவர்களுக்கு பீர்க்கங்காய் மிக அவசியம். நீர்ச்சத்து அதிகம் என்பது முக்கிய காரணம். பீர்க்கங்காய் சேர்த்த உணவுகளை உண்ணும்போது நீண்ட நேரத்துக்குப் பசி எடுப்பதில்லை.

**எப்படி வாங்குவது?**

அடர் பச்சை நிறத்தில், இறுக்கமான தோல் கொண்ட காயாக இருக்க வேண்டும். காம்புப் பகுதியும் பசுமையாக இருக்க வேண்டும். கனமானதாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும். தோல்களில் வெடிப்போ, நிறமாற்றமோ இருந்தால் வாங்கக்கூடாது.

**எப்படி பத்திரப்படுத்துவது?**

பீர்க்கங்காய் நீர்ச்சத்தும் நார்ச்சத்தும் நிறைந்த ஒரு காய் என்பதால் உடனுக்குடன் சமைத்து விடுவது சிறந்தது. அதிகபட்சம் 3 நாட்களுக்குள் உபயோகித்துவிட வேண்டும்.

**எப்படியெல்லாம் சமைக்கலாம்?**

கூட்டாக, பொரியலாக, மசாலாவாக, துவையலாக எப்படி வேண்டுமானாலும் சமைக்கலாம். சாம்பாரில் சேர்க்கலாம். பீர்க்கங்காயின் தோல்கூட மருத்துவகுணம் வாயந்தது என்பதால் அதையும் துவையலாக அரைக்கலாம்.பீர்க்கங்காயை வில்லைகளாக வெட்டி, பஜ்ஜி செய்யலாம். வெங்காயம், தக்காளி, பூண்டு ஆகியவற்றை வதக்கி, அத்துடன் பீர்க்கங்காய் துண்டுகளும் சேர்த்து வதக்கி, உப்பு, காரம் சேர்த்து, தொக்காக செய்து சாதம், இட்லி, தோசை, சப்பாத்தி ஆகியவற்றுக்குத் தொட்டுக் கொள்ளலாம்.

**பீர்க்கங்காயின் பிற பயன்கள்**

பீர்க்கங்காயைக் காய வைத்து உள்ளே இருக்கும் நார்ப் பகுதியைப் பதப்படுத்தி, உடம்பு தேய்த்துக் குளிக்கும் நார் செய்யப்படுகிறது. பீர்க்கை நார் சருமத்தை சுத்தப்படுத்தவும், இறந்த செல்களை நீக்கி, ஆரோக்கியமாக வைக்கவும் கூடியது.பீர்க்கை இலைகளை அரைத்து, சொறி, சிரங்கு, நாள்பட்ட புண்களில் பற்று போட்டால் அவை சீக்கிரமே

குணமாகும்.

**ஆரோக்கிய ரெசிபி கொங்குபீர்க்கங்காய் கடைசல் என்னென்ன தேவை?**

பீர்க்கங்காய் - 1 கப், பெரிய தக்காளி - 1, பெரிய வெங்காயம் - 1 கப் (எல்லாவற்றையும் பொடியாக நறுக்கவும்.) உப்பு, எண்ணெய் - தேவைக்கு, மஞ்சள் தூள் - ஒரு சிட்டிகை, சாம்பார் பொடி - 1 டீஸ்பூன், துவரம் பருப்பு, பாசிப்பருப்பு - தலா 1/4 கப்.

தாளிக்க: கடுகு - 1 டீஸ்பூன், மோர் மிளகாய் வற்றல் - 3, உளுத்தம்பருப்பு - 1 டீஸ்பூன், பெருங்காயம் - மிளகு அளவு, நெய் - 1 டீஸ்பூன், சீரகம் - 1 டீஸ்பூன், கறிவேப்பிலை - சிறிது.

**எப்படிச் செய்வது?**

துவரம் பருப்பு, பாசிப் பருப்பை உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து நீர் விட்டு குழைய வேகவிட்டுக் கொள்ளவும். மத்தால் கடைந்து கொள்ளவும். இந்த பருப்பு கடைசலை தனியாக வைக்கவும். தாளிக்க வேண்டியதை எண்ணெயில் தாளித்து பருப்பில் கொட்டவும். கடாயில் எண்ணெய் சிறிது விட்டு வெங்காயம், அரிந்த தக்காளி மற்றும், பீர்க்கங்காயை வதக்கி தாளித்து கொட்டிய பருப்பு கடைசலை விட்டு, சாம்பார் பொடி சேர்த்து நன்கு கொதி வந்ததும் இறக்கவும். இதை குக்கரில் மாற்றி ஒரு விசில் விட்டும் இறக்கலாம். கடைசியாக நெய்யில் 1 டீஸ்பூன் சீரகம், கறிவேப்பிலை தாளித்து இந்த கடைசலில் கொட்டவும்.

**பீர்க்கங்காய் தோல் துவையல்**

**என்னென்ன தேவை?**

பீர்க்கங்காய் தோல் - 1 கப், புளி விழுது - 20 கிராம், தேங்காய் துருவல் - 3 டேபிள் ஸ்பூன், காய்ந்த மிளகாய் - 3, எண்ணெய் - 1 டீஸ்பூன், கடுகு - 1

டீஸ்பூன், உளுத்தம் பருப்பு - ஒன்றரை டீஸ்பூன், பெருங்காயம் - 1 சிட்டிகை, உப்பு - தேவைக்கேற்ப.

**எப்படிச் செய்வது?**

பீர்க்கங்காயைக் கழுவி, தோலை சீவி, சின்னதாக நறுக்கித் தனியே வைத்துக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் வைத்து பீர்க்கங்காய் தோலை, காய்ந்த மிளகாய், தேங்காய் சேர்த்து வதக்கவும். ஆறியதும் உப்பு, புளி சேர்த்துக் கரகரப்பாக அரைக்கவும். கடைசியில் எண்ணெயில் கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம் தாளித்துச் சேர்த்துப் பரிமாறவும்.

**பீர்க்கங்காய் பால் கூட்டு**

**என்னென்ன தேவை?**

பீர்க்கங்காய் - 1 கப் (சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்), மஞ்சள் தூள் - ஒரு சிட்டிகை, தேங்காய்ப் பால் - 1/2 கப், கடுகு - 1 டீஸ்பூன், உப்பு, எண்ணெய் - தேவைக்கு, பச்சைமிளகாய் - 2, சோம்பு - 1 டீஸ்பூன், பட்டை - 1 சிறிய துண்டு, அரிசி மாவு - 2 டேபிள்ஸ்பூன், பால் - 1/2 கப், சர்க்கரை - 1/2 டீஸ்பூன்.

**எப்படிச் செய்வது?**

பீர்க்கங்காயை உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து சிறிது நீர் சேர்த்து வேக விட்டு கொள்ளவும். கடாயில் எண்ணெய் சிறிது விட்டு கடுகு தாளித்து சோம்பு, பட்டை போட்டு வதக்கி பச்சை மிளகாய் கீறிப் போட்டு தாளிக்கவும். இதில் வெந்த பீர்க்கங்காய் போட்டு பிரட்டி அரிசி மாவை பாலில் கரைத்து ஊற்றவும். இரண்டு கொதி வரவும் சர்க்கரை சேர்க்கவும். இறக்கும் போது தேங்காய்ப் பால் இட்டு கிளறி இறக்கவும். பீர்க்கங்காய் பால் கூட்டு தயார். சாதத்தில் கலந்தும் சாப்பிடலாம்.

**தோல் நோய்களை சரிசெய்யும் சிவனார் வேம்பு**




தோல் நோய்களை குணமாக்கும் தன்மை கொண்டதும் புண்களை ஆற்ற கூடியதும், புற்றுநோயை தடுக்கவல்லதும், ஈரலை பலப்படுத்த கூடியதும், பல் வலியை சரி செய்ய கூடியதுமான சிவனார் வேம்புவை பற்றி இன்று நாம் பார்ப்போம். சிவனார் வேம்பு சாலையோரங்களில் கிடைக்க கூடியது. இதன் இலைகள் மிகச் சிறியதாக இருக்கும். சிவனார் வேம்புவின் காய்களானது கடுகு காய்களை போன்றது. குறுஞ்செடியான இதன் இலைகள் முட்டை வடிவில் இருக்கும். பூக்கள் சிவப்பு நிறத்திலும், காய்கள் கொத்து கொத்தாக இருக்கும். சிவனார் வேம்பு பல்வேறு நோய்களுக்கு மருந்தாகிறது. தோல்நோயை போக்கும். புற்றுநோயை தடுக்க கூடியது. ரத்தத்தை சுத்தப்படுத்தும். வலியை போக்க கூடியது. காய்ச்சலை குணமாக்கும். சிவனார் வேம்புவை பயன்படுத்தி தோல் நோய்க்கான உள்மருந்து தயாரிக்கலாம்.

சிவனார் வேம்புவை துண்டுகளாக வெட்டி எடுத்து கொள்ள வேண்டும். அதனுடன் அரை ஸ்பூன் பரங்கிபட்டை சூரணம், பனங்கற்கண்டு சேர்த்து நன்றாக கொதிக்க வைக்க வேண்டும். பின்னர் பால் சேர்த்து குடிக்கலாம். இது தோல் வியாதிகள், வலி மற்றும் வீக்கத்துக்கான மருந்தாகிறது. மஞ்சள் காமாலையை குணப்படுத்தும். ஹெபடிட்டிஸ் பி, சி சரியாகிறது.

நச்சுக்களை வெளித்தளுக்கிறது. தோல்நோய்கள் எதுவாக இருந்தாலும் குணப்படுத்த கூடியது. சொரியாஸ் குணமாகும். ஈரலை பாதுகாக்க கூடியது.

சிவனார் வேம்புவின் வேரை பயன்படுத்தி பல் வலி மற்றும் தாடைகளில் புண்களை போக்கும் மருந்து தயாரிக்கலாம். வேரை தண்ணீரில் நன்றாக சுத்தப்படுத்தி எடுத்து கொள்ளவும். அதனுடன் அரை ஸ்பூன் சீரகம், சிறிது உப்பு, நீர் விட்டு கொதிக்க வைத்து பருகலாம்.இது ஈறுகளில் ஏற்படும் தொற்று, வீக்கத்தை போக்கும். இருவேளை குடித்து வந்தால், வாயில் உள்ள புண்கள் ஆறும். உள் உறுப்புகளை தூண்டும். வாய் கொப்பளித்தால் ஈறுகளில் ஏற்படும் வீக்கம் குறையும். தாடையில் ஏற்படும் புண்கள் சரியாகும். சிவனார் வேம்பு வாத, பித்தத்தால் ஏற்படும் நோய்களை போக்க கூடியது. புற்றுநோயை போக்கும். நாக்கு புண், கன்னத்தில் ஏற்படும் புண்கள், அல்சரை ஆற்றும்.

சிவனார் வேம்புவை பயன்படுத்தி தோல் வியாதிகளுக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். சிவனார் வேம்புவின் வேர் மற்றும் இலைகள் சேர்ந்த பொடி எடுத்துக்கொள்ளவும். இது நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். இதனுடன் அருகம்புல், தேங்காய் எண்ணெய் சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சி எடுத்து கொள்ளவும்.

கட்டிகள், புண்கள் மீது பூசினால் அவைகள் விரைவில் ஆறும். தைலத்தை பூசும்போது சொரி, சிரங்கு, படை சரியாகும். தொழுநோய் புண்கள், நாள்பட்ட அழுகிய புண்கள், சிலந்தி கட்டிகளுக்கு மருந்தாகிறது. சிவனார் வேம்புவுக்கு இறையனார் வேம்பு என்ற பெயரும் உள்ளது. இதன் இலைகள் தோல்நோய்க்கு மருந்தாகிறது. உள்மருந்தாக பயன்படுத்தும்போது ஈரல் பலப்படும். சர்க்கரை நோயை தணிக்க கூடியது. வலி வீக்கத்தை குறைப்பதுடன், ரத்தத்தை சுத்தப்படுத்துகிறது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**டெல்டாவில் சம்பா சாகுபடி பாதிக்கும் நிலை_: காவிரி கண்காணிப்பு குழு டெல்லியில் இன்று கூடுகிறது_ - தமிழகத்துக்கு தண்ணீர் கிடைக்குமா?**



காவிரி நதிநீர் கண்காணிப்பு குழுவின் கூட்டம் டெல்லியில் இன்று நடக்கிறது. கர்நாடகத்திடம் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் பெற்றுத்தர இந்தக் கூட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் எழுந்துள்ளது.

ஆண்டுதோறும் ஜூன் 12-ல் காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து தண் ணீர் திறக்கப்படும். ஆனால், இந்த ஆண்டு மேட்டூரில் குறைந்த அளவு தண்ணீரே இருந்ததால், ஆகஸ்ட் 9-ம் தேதிதான் அணை யிலிருந்து தண்ணீர் திறக்கப் பட்டது. எனினும், வெண்ணாறு மற்றும் காவிரியில் முறை வைத்துதான் தண்ணீர் திறக்கப் படுகிறது. இதனால், ஏற்கெனவே சாகுபடி செய்துள்ள குறுவைப் பயிரைக் காப்பாற்ற முடியாமலும், சம்பா சாகுபடிப் பணிகளைத் தொடங்க முடியா லும் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர்.

கர்நாடகத்திடம் இருந்து காவிரி நீரைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, டெல்டா மாவட் டங்களில் விவசாயிகள் சாலை மறியல் மற்றும் மத்திய அரசு நிறுவனங்களுக்கு முன்பு முற்று கைப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், காவிரியில் தண்ணீர் திறந்துவிட முடியாது என்று கர்நாடக அரசு திட்டவட்டமாக கூறி வருகிறது. காவிரியில் கர்நாடகம் தண்ணீர் திறந்துவிடாததால் மேட்டூர் அணை நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. அணையில் தற்போது 64 அடி மட்டுமே தண்ணீர் உள்ளது. அதிகபட்சம் 2 வாரங்களுக்கு மட்டுமே டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்கும் என்பதால் சம்பா சாகுபடியும் முழுமையாக பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், காவிரி கண்காணிப்பு குழுக் கூட்டம் டெல்லியில் இன்று நடக்கிறது. காவிரி நதிநீர்ப் பிரச்சினையை தீர்க்க மத்திய அரசால் அமைக்கப் பட்ட நடுவர் மன்றம், 2007-ல் இறுதித் தீர்ப்பை வழங்கியது. காவிரி ஆற்றில் தமிழகத்துக்கு ஆண்டுக்கு 192 டிஎம்சி நீரை கர்நாடகம் வழங்க வேண்டும். மாதாந்திர நிர்ணய அடிப்படையில் தண்ணீர் விட வேண்டும். இதற் காக காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் பங்கீட்டு ஒழுங்குமுறை குழுவை அமைக்க வேண்டும் என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த உத்தரவு மத்திய அரசின் கெஜட்டில் வெளியிடப்பட்டது. ஆனாலும், கர்நாடகத்திடம் இருந்து உரிய நீரைப் பெற்றுத் தரவும், காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் ஒழுங்குமுறை குழுவை அமைக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. 2013-ல் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, தங்கள் மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடப்ப தால் அவகாசம் வழங்க வேண் டும் என கர்நாடகம் தரப்பில் கோரப்பட்டது. இதையடுத்து இரு மாநிலங்களும் பிரச்சினையின்றி காவிரியில் நீரைப் பகிர்ந்து கொள்ள தற்காலிகமான கண்காணிப்பு குழுவை அமைத்து உத்தரவிட்டது.

மத்திய நீர்வளத் துறை செயலாளரை தலைவராகவும் தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரி மாநிலங்களின் தலை மைச் செயலாளர்களை உறுப்பி னர்களாகவும் கொண்ட இந்தக் குழுதான்

டெல்லியில் இன்று கூடுகிறது. இக்கூட்டத்தில் தமிழக அரசு கடுமையாக வாதாடி, உரிய நீரை பெற்றுத்தர வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

இதுகுறித்து அனைத்து விவசாயிகள் சங்க கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன் கூறும்போது, ‘‘தமிழ கத்துக்கு உரிய நீரை கர்நாடகத் திடம் இருந்து பெற்றுத் தரவும், காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் ஒழுங்குமுறை குழுவை உடனடியாக அமைக்குமாறு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவும் கண்காணிப்பு குழுக் கூட்டத்தில் முடிவெடுக்க வேண்டும்’’ என்றார்.